பக்கங்கள்:11

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 புரட்டாதி 25 சனிக்கிழமை 11.10.2025 கதிர் 335

### இனி இது ரகசியம் அல்ல!

உள்ளூராட்சிசபைத்தேர்தலுக்குப் பின்னராக தமிழ் அரசியல் பரப்பில் ஒரு கொள்கைக் கூட்டு உருவாக்கப்பட்டது. இப்போது அது சிரிப்பாகச் சிரித்து ☞2

## பிமலிடமிருந்து துறைமுக அமைச்சை பறித்ததற்குச் சாணக்கியன் வரவேற்பு

கொள்கலன்கள் விடுவிப்பு விவகாரத்துடன் தொடர்புடைய பிமல் ரத்நாயக்கவைதுறைமுகஅபிவிருத்தி அமைச்சு விடயதானத்தில் இருந்து நீக்கியுள்ளமை வரவேற்கத்தக்கது. கொள்கலன்கள் விடுவிப்பு குறித்து முறையான விசாரணைகள் மேற்கொள்ளப்படும்என்றநம்பிக்கை தோற்றம்பெற்றுள்ளதுஎனஇலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இராசமாணிக்கம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற அமர்வில் வாய்மூல விடைக்கானவினாக்கள்வேளையில் உரையாற்றியபோது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஆளும்தரப்புத் தொடர்பில் மக்களுக்குநம்பிக்கைஏற்பட்டுள்ளது. அமைச்சர்பிமல்ரத்நாயக்கவிடமிருந்த சிவில் விமான சேவைகள் மற்றும் துறைமுகங்கள்அபிவிருத்திஅமைச்சு பிறிதொருவருக்குவழங்கப்பட்டுள்ளது. கொள்கலன்கள் விவகாரத்தினாலா அவர் துறைமுக அமைச்சு பதவியில் இருந்து நீக்கப்பட்டாரா என்பது தெரியவில்லை.

ஆளும்தரப்புக்கு வாழ்த்து தெரிவித்துக் கொள்கிறேன். கொள்கலன்கள் விவகாரத்துடன் தொடர்புடைய நபரை ☞2

## கம்மன்பிலவும் பாராட்டு

துறைமுகத்திலிருந்து எவ்வித சோதனைகளும் இன்றி கொள்கலன்கள் விடுவிக்கப்பட்டமை தொடர்பிலான சுயாதீன விசாரணைகளுக்கு இடமளித்து பிமல் ரத்நாயக்கவிடமிருந்து அமைச்சு பறிக்கப்பட்டுள்ளமை பாராட்டுக்குரியது. ஆனால் அது மாத்திரம் போதாது. இலஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பான விசாரணை ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் ரங்க திஸாநாயக்கவும் பதவி நீக்கப்பட வேண்டும் என பிவிதுரு ஹெல உருமயவின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஆளும்தரப்பின் 159 நாடாளுமன்ற உறுப்பினர்களும் இன்று நகைச்சுவையாளர்களாகியுள்ளனர். இந்த அமைச்சரவை பிரயோசனமற்றது என்று நாம் கடந்த 10 மாதங்களாக கூறிக் கொண்டிருப்பது அரசுத் தலைவர் அநுரகுமார திஸாநாயக்கவுக்கு இப்போதாவது புரிந்திருக்கின்றமை மகிழ்ச்சியளிக்கிறது. தேசிய மக்கள் சக்தயின் தேர்தல் பிரகடனத்தில் பிரதி அமைச்சர்கள் 25 பேர் மாத்திரமே நியமிக்கப்படுவர் எனக் ☞2

### பிள்ளையான் மீது பழிபோடும் முயற்சி தோற்றதால்

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து புதிதாக திரைக்கதை எழுதுகிறார்கள்

### முன்னாள் அமைச்சர் கம்மன்பில சாடல்

**உயிர்த்தஞாயிறுதாக்குதல்களின் பிரதான சூத்திரதாரி யார் என்பதை இந்த ஆளும்தரப்பு தனது ஆட்சி காலத்தில் ஒருபோதும் வெளிப்படுத்தாது. பிள்ளையான் மீதுபழிசுமத்துவதற்குஎடுக்கப்பட்ட முயற்சிகள்தோல்வியடைந்ததால், தற்போது ஷானி அபேசேகர மற்றும் ரவி செனவிரத்னவால் புதிய திரைப்படத்துக்கான கதை தயாரிக்கப்படுவதாக பிவிதுரு ஹெலஉருமயவின்தலைவர்உதய கம்மன்பில தெரிவித்தார்.**



**கொழும்பில் நேற்று** ☞2

## இந்தியாவிடமிருந்து பணம் பெற மறுத்த அமைச்சர் பதவி நீக்கம்

சீனா கடன் வழங்கும்போது அதனை பெற்றுக்கொள்ள முன்னிலையாகும் ஆளும்தரப்பு காங்கேசன்துறை துறைமுகத்தை அபிவிருத்தி செய்வதற்கு இந்தியா 63 மில்லியன் டொலரை வழங்குவதற்கு முன்வந்தபோது அதனை பெற்றுக்கொள்ளவில்லை. அந்த அமைச்சர்தான் தற்போது துறைமுக அமைச்சில் இருந்து நீக்கப்பட்டுள்ளார். இந்தியாவின் நன்கொடையை ஆளும்தரப்பு ஏன் பெற்றுக்கொள்ளவில்லை என இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் ☞2

## ஐ.தே.க. – ஐ.ம.சக்தி கட்சிகள் கொள்கை ரீதியாக இணைவு

### மகிழ்ச்சி தெரிவித்தார் சஜித்

ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய தேசிய கட்சி ஆகிய இரு கட்சிகளும் தத்தமது தனித்துவத்தன்மையை பாதுகாத்துக் கொண்டு, கொள்கை ரீதியாக இணைந்து செயற்படத் தீர்மானித்துள்ளமைமகிழ்ச்சியளிப்பதாகஎதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

அறிக்கையொன்றை வெளியிட்டு இதனைத் தெரிவித்த அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐக்கிய மக்கள் சக்தியின் செயற்குழு கூட்டத்திலும், அதற்கு முன்னர் முகாமைத்துவக் குழு கூட்டங்கள் இரண்டிலும் ஏகமனதான தீர்மானமொன்று எட்டப்பட்டது. அதற்கமைய ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமைத்துவம் மற்றும் நெறிப்படுத்தலின் கீழ் ஐக்கிய மக்கள் சக்தியுடன் பொது வேலைத்திட்டத்துக்கு அரசியல் ரீதியில் ஒன்றிணைந்து செயற்படுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது,

அதற்காக ஏகமதான அனுமதி கிடைக்கப் பெற்றுள்ளது. நாட்டையும் மக்களையும் பாதித்துள்ள பிரச்சினைகள் மற்றும் ஏனைய காரணிகளுக்கு தீர்வினையும் பதிலையும் வழங்குவதற்காககொள்கைரீதியானமுற்போக்கான இணக்கப்பாட்டுக்கமைய இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் ☞2

## போதைப் பொருள் குற்றச்சாட்டில் ஒரே வாரத்தில் 3,200 பேர் கைது

நாடளாவியரீதியில்பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டு வரும் விசேட போதைப்பொருள் வலையமைப்பை கண்டறியும் நடவடிக்கைக்கு அமைய கடந்த ஒருவார காலப் பகுதியில் போதைப்பொருளுடன் 3,206 சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

பொலிஸ்மா அதிபர் பிரியந்த விரசூரியவின் பணிப்புரைக்கமைய ஏப்ரல் 13 முதல் நாடளாவிய ரீதியில் பொலிஸாரால் குற்றசெயல்கள் மற்றும் போதைப்பொருள் தடுப்பு விசேட நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. மேற்படி நடவடிக்கையுடன் இணைந்ததாக ஒக்டோபர் 3 முதல் ஒக்டோபர் 9 முன்னெடுக்கப்பட்ட போதைப்பொருள் வலையமைப்பை கண்டறிதல் மற்றும் சந்தேகநபர்களைக் கைது செய்யும் நடவடிக்கைக்கு அமைய 3,206 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதற்கமையநாடுமுழுவதும்3,212சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் இதன்போது ஹெரோயினுடன் 1,090 சந்தேகநபர்களும், ஐஸ் போதைப்பொருளுடன் 1112 சந்தேகநபர்களும், ஹேஸ்போதைப்பொருளுடன் 24 சந்தேகநபர்கள் மற்றும்கஞ்சாபோதைப்பொருளுடன் 885 சந்தேகநபர்களும் கைதாகியுள்ளனர். ☞2

## ஒரு வருட காலத்தில் பெருந்தோட்டங்களில் எத்தனை வீடுகளை ஆளும்தரப்புக் கட்டியது?

### ஜீவன் தொண்டமான் நாடாளுமன்றில் கேள்வி

ஒரு வருட காலத்தில் பெருந்தோட்ட பகுதியில் எத்தனை வீடுகளை கட்டினீர்கள் என்று ஆளும்தரப்பிடம் நேற்று (நேற்று முன்தினம்) கேட்டேன். பதில் கிடைக்கவில்லை. இன்றும் (நேற்றும்) கேட்டேன் பதில் கிடைக்கவில்லை. சம்பள நிர்ணய சபை ஊடாக 1700 ரூபாவை நாங்கள் வழங்கும்போது, அது வேண்டாம் 2,138 ரூபாய்தான் வேண்டும் என்று குறிப்பிட்டவர்கள் எங்கே? ஒரு வருடம் முடிந்துவிட்டது. சம்பள அதிகரிப்பு கிடைக்குமா, கிடைக்காதா என ஐக்கிய தேசியக் கட்சியின் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜீவன் தொண்டமான் ஆளும்தரப்பிடம் கேள்வியெழுப்பினார்.

நாடாளுமன்றத்தில் ☞2

## ‘ஏக்கிய ராஜ்ய’ வந்தால் எதிர்ப்போம் தமிழ் அரசை அழிப்பது பகல்கனவே

### கஜேந்திரகுமாருக்கு சிவஞானம் பதிலடி

‘ஏக்கியராஜ்ய’நாடாளுமன்றத்துக்குகொண்டு வரப்பபட்டால் இலங்கை தமிழ் அரசுக் கட்சி எதிர்த்து வாக்களிக்கும். அதேநேரம், தமிழ் அரசுக் கட்சியை மலினப்படுத்தி அழித்து விடலாம் என்பது பகல் கனவே என அந்தக் கட்சியின் தலைவர் சிவஞானம் தெரிவித்தார்.

அண்மையில்தான்நடத்தியசெய்தியாளர்கள் சந்திப்பு ஒன்றில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணித் தலைவர் கஜேந்திரகுமார், தமிழ் தேசிய மக்கள் முன்னணியை தவிர அனைத்து தரப்புக்களும் போருக்கு பிந்தைய காலத்தில் ஒற்றையாட்சிக்குள் உள்ள 13ற்கு ☞2

## இனி இது .....

வருகிறது. அந்தக் கொள்கைக் கூட்டில் சொல்லப்பட்ட எதனையும் கூட்டிலுள்ள கூட்டாளிக் கட்சிகளே மதிக்கவில்லை. ஆனாலும் இன்னும் அந்தக் கூட்டிலிருந்து வெளியேறியதாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அறிவிக்கவில்லை.

வடக்கு கிழக்கில் தேசிய மக்கள் சக்தி ஒரு உள்ளூராட்சி சபைகளில்கூட ஆட்சியமைக்க விடமாட்டோம் என்று இந்தக் கூட்டு ஓங்கிக் கத்தியது. ஆனால், அந்தக் கூட்டிலுள்ளவர்கள் மன்னாரில் தேசிய மக்கள் சக்தியோடு சேர்ந்துகொண்டு ஆட்சியமைத்தார்கள். அவர்களுக்கு சபைகளில் பதவிகளும் கொடுத்தார்கள். ஆனால் கஜேந்திரகுமார் அது பற்றி மூச்சும் விடவில்லை. அதுபோக, 13ஆம் திருத்தத்தை ஏற்கமாட்டோம், அது தமிழர்களின் தீர்வுக்கான தொடக்கப் புள்ளியே இல்லை என்று கஜேந்திரகுமார் அன்ட் கோ கத்திக்கொண்டிருக்க அவரது முதுக்குப் பின்னாலேயே ஈபிஆர்எல்எவ் 13ஐ செயற்படுத்தவும் வலுப்படுத்தவுமென வடக்கு கிழக்கில் ஒவ்வொரு மாவட்டமாகக் கூட்டம் நடத்தி வருகின்றது. ஆனால் பொது வெளியில் அது பற்றியும் கஜேந்திரகுமார் மூச்சு விடுவதில்லை.

போதாததற்கு அண்மையில் செய்தியாளர்களிடம் பேசிய தமிழ் அரசுக் கட்சித் தலைவர் கஜேந்திரகுமாரைத் தவிர ஏனைய எல்லாத் தமிழ்க் கட்சிகளும் 13ஐ ஏற்றுக்கொண்டிருக்கின்றன, அதில் நாங்கள் ஒற்றுமையாகவே இருக்கின்றோம் என்று தெரிவித்திருந்தார். அதற்கு சிவஞானத்தாரைப் பிடித்துப் பிய்த்து உதயறிய கஜேந்திரகுமார், அவர் கூறிய மீதமுள்ள கட்சிகள் அனைத்தும் தனதுகொள்ளைக்கூட்டில்தானேஇருக்கின்றன என்று மறுப்பறிக்கை விடும்படி அவற்றின் தலைவர்களிடம் கேட்கவும் இல்லை அவர்களை விமர்சிக்கவும் இல்லை.

இப்படிதமிழ்அரசியல்பரப்பில்கொள்கைக் கூட்டின் சீத்துவம் இருக்க, தெற்கிலும் இப்போது இதேபோன்ற கொள்கைக் கூட்டு ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சியும் ஐக்கிய மக்கள் சக்தியும்தான் இந்தக் கொள்கைக் கூட்டில் இணைந்துள்ளன.

ஐக்கிய தேசிய கட்சியுடன் அரசியல் மற்றும் கொள்கை ரீதியாக இணைந்து செயற்படுவதற்கு ஐக்கிய மக்கள் சக்தியின் செயற்குழு மற்றும் முகாமைத்துவக் குழு என்பன ஏகமனதாக அனுமதியளித்துள்ளன.

இதற்கு முன்னர் இரு சந்தர்ப்பங்களில் கூடியஐக்கியமக்கள்சக்தியின்முகாமைத்துவக் குழுக் கூட்டங்களிலும் இந்த யோசனைக்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. அதற்கமைய குறித்த யோசனைக்கு செயற்குழுவிலும் அனுமதியைப் பெற்றுக் கொள்வதற்காக வியாழக்கிழமை ஐக்கிய மக்கள் சக்தியின் செயற்குழு கொழும்பில் கூடியது. எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில் ஏனையசகலஉறுப்பினர்களதும்பங்கேற்புடன் இடம்பெற்ற இந்த கூட்டத்தில் ஐ.தே.க.வுடன் இணைந்து செயற்படுவதற்கு ஏகமனதாக அனுமதி வழங்கப்பட்டது.

அதற்கமைய இதற்கான ஒருங்கிணைப்பு செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதற்கான பொறுப்புக்கள் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மரிக்கார், முஜிபுர் ரஹ்மான் மற்றும் கபீர் ஹசீம் ஆகியோரிடம் வழங்கப்பட்டுள்ளன. அந்த வகையில் உத்தேச மாகாணசபைத் தேர்தலில் இரு கட்சிகளும் இணைந்து போட்டியிடுவதற்கான பேச்சு மற்றும் அடுத்த கட்ட நடவடிக்கைகளை வரும் நாட்களில் தொடங்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

'எதிர்கால அரசியல் வேலைத்திட்டங்களை வெற்றிகரமாக முன்னெடுப்பது குறித்து கலந்துரையாடப்பட்டது. எந்தவொரு கட்சியானாலும் அது ஆதரவாளர்களுக்குச் சொந்தமானதாகும். மாறாக அதில் முக்கிய பதவிகளை வகிப்பவர்களுக்குச் சொந்தமானதல்ல. அந்த வகையில் நீண்ட காலமாக இரு கட்சிகளினதும் ஆதரவாளர்களால் எதிர்பார்க்கப்பட்ட தீர்மானம் இன்று எடுக்கப்பட்டுள்ளது. இதில் ஏற்கனவே இனங்காணப்பட்ட ஏனைய பிரச்சினைகளுக்கும் விரைவில் தீர்வு காணப்படும்' என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

'இரு தரப்பினருக்கும் சிறப்பான பயணமாகஅமையக்கூடிய இந்தத்தீர்மானம் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாக அமையும். தலைமைத்துவம் தொடர்பில் எவ்வித முரண்பாடுகளும் இன்றி தீர்வு காணப்படும். எமது இணைவால் ஆளும்தரப்பு அச்சமடைந்துள்ளது' என்று கட்சியின் செயலாளர் மத்தும பண்டார தெரிவித்தார்.

இனி இந்தக் கொள்கைக் கூட்டின் சீத்துவம் எப்படியிருக்கப் போகின்றது என்பதையும் பொறுத்திருந்து பார்ப்போம்..

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## உயிர்த்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்த அவர் மேலும் தெரிவித்ததாவது:

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் சூத்திரதாரி என்பவர் இந்த ஆளும்தரப்பு தனது 5 ஆண்டு ஆட்சி காலத்தில் விற்று உண்ணக் கூடிய ஒன்றாகும். கடந்த ஏப்ரல் 21ஆம் திகதிக்கு முன்னர் சூத்திரதாரி யார் என்பது வெளிப்படுத்தப்படும் என்று அரசுத் தலைவர் கூறினார். ஆனால் அது முழுப்பொய் என நான் அன்றே கூறினேன். அது இன்று நிரூபனமாகியுள்ளது. பிள்ளையானைபிரதான சூத்திரதாரியாக்க முயற்சித்தனர். எம்மால் முன்னெடுக்கப்பட்ட செயற்பாடுகளால் அந்த முயற்சி கைவிடப்பட்டது.

ஷானி அபேசகர மற்றும் ரவி செனவிரத்னவால் இயக்கப்பட்ட திரைப்படம் இடைநடுவில் கைவிடப்பட்டத்தால், தற்போது மீண்டும் புதிய திரைப்படமொன்றை தயாரிக்கின்றனர். ஆனால் அதுவும் வெற்றியளிக்காது. இந்த ஆளும்தரப்பின் 5 ஆண்டு பதவி காலத்துக்குள் இந்த விடயம் ஒருநாளும் வெளிப்படு;த்தப்பட மாட்டாது. கடந்த அரசாங்கங்களின் ஆட்சியின் போது ஜே.வி.பி. தொழிற்சங்கங்கள் தொடர்ச்சியாக வேலை நிறுத்த போராட்டங்களில் ஈடுபட்டு குழக்கப்பங்களை ஏற்படுத்தியது. ஆனால் பொறுப்புள்ள எதிர்;க்கட்சிகளாக இன்று நாம் அவ்வாறு எந்தவொரு இடையூறுகளையும் ஆளும்தரப்புக்கு ஏற்படுத்தவில்லை.

நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரைக் கொன்று, அமைச்சர் உள்ளிட்ட ஆளுங்கட்சியினரின் இல்லங்களை தீக்கிரையாக்குமளவுக்கு போராட்டங்களில் ஈடுபட்டனர். நாமே இந்த போராட்டங்களை செய்கின்றோம் என்பதை அரசுத் தலைவர் அநுரகுமார திஸாநாயக்கவே கூறியிருக்கின்றார். நாம் அவ்வாறு எதுவும் செய்யவில்லை. மாறாக ஆளும்தரப்பின் குறைபாடுகளை சுட்டிக்காட்டுகின்றோம். எனவே எமது குரலை ஒடுக்குவதற்கு முயற்சிக்காமல், நாம் சுட்டிக்காட்டும் குறைகளை நிவர்த்தி செய்து கொண்டு பயணிப்பதற்கு ஆளும்தரப்பு முயற்சிப்பதே சிறந்ததாகும் என்றார்.

## பிமலிடமிருந்து ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விலக்கி, முறையான விசாரணைகளை மேற்கொள்வதற்கு ஆளும்தரப்பு அவதானம் செலுத்தியுள்ளது என்ற நம்பிக்கை தோற்றம் பெற்றுள்ளது.

சிறந்த தரப்பினருடன் ஒன்றிணைந்து செயற்படுவதற்கு நாங்கள் தயாராகவே உள்ளோம். புதிய துறைமுக அமைச்சர் துறைமுகங்களை சிறந்த முறையில் மறுசீரமைப்பார் என்று எதிர்பார்க்கிறோம் என்றார்.

## பிமலிடமிருந்து ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூறப்பட்டுள்ளது. ஆனால் தற்போது பிரதி அமைச்சர்களின் எண்ணிக்கை 30க்கும் அதிகமாக அதிகரிக்கப்பட்டுள்ளதிலிருந்து அந்த வாக்குறுதியும் பொய்யானது என நிரூபிக்கப்பட்டு;ள்ளது.

323கொள்கலன்கள்குறித்தவிசாரணைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்கவிடமிருந்து ஆரம்பிக்கப்பட வேண்டும் என நாம் இலஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பான விசாரணை ஆணைக்குழுவில் அளித்துள்ள முறைப்பாட்டில் கோரியிருக்கின்றோம். குறித்த கொள்கலன்களை விடுவிப்பதற்கு அமைச்சர் பிமல் ரத்நாயக்கவே ஆலோசனை வழங்கியதாகஅப்போதையசுங்கபணிப்பாளர் நாயகம் தெரிவித்திருந்தார். அதேபோன்று பிமல் ரத்நாயக்க துறைமுக அமைச்சர் பதிவியிலிருந்து நீக்கப்பட வேண்டும் என்பதையும் நாம் இதற்கு முன்னர் வலியுறுத்தியிருக்கின்றோம்.

அமைச்சர் துறைமுக அமைச்சராக பதவி வகிக்கு; வரை சுயாதீன விசாரணைகளை எதிர்பார்க்க முடியாது. 9 மாதங்களின் பின்னரேனும் சுயாதீன விசாரணைகளுக்கு இடமளித்து பிமல் ரத்நாயக்கவை அந்த அமைச்சு பதவியிலிருந்து நீக்கியமைக்கு அரசுத் தலைவர்க்கு பாராட்டுக்களை தெரிவித்துக்கொள்கின்றோம். கொள்கலன்கள் குறித்த விசாணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், அடுத்து பிமல் ரத்நாயக்க அமைச்சு பதவியிலிருந்து நீக்கப்பட வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் வலியுறுத்தும் என்பதை அரசுத் தலைவர் ஊகித்துவிட்டார்.

எனவேதான் எதிர்க்கட்சிகள் கூற முன்னர் அரசுத்தலைவர்தானகவேஅந்ததீர்மானத்தை எடுத்திருக்கின்றார். அதேபோன்று சபை முதல்வாரன பிமல் ரத்நாயக்கஇலஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பான விசாரணை ஆணைக்குழுவின் தலைவராக ரங்க திஸாநாயக்கவை நியமிப்பதற்காக பொய் கூறி அரசியலமைப்பு பேரவையையே ஏமாற்றியிருக்கின்றார். எனவே அவரை அரசியலமைப்பு பேரவையிலிருந்து நீக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்என்பதையும்அரசுத்தலைவர்யிடம் கேட்டுக்கொள்கின்றோம். வரையறைகளுக்கு அப்பால்பிரதிஅமைச்சர்கள்நியமிக்கப்பட்டுள்ள போதிலும், இரு சிரேஷ்ட உறுப்பினர்களை மறந்துள்ளனர்.

1994ஆம் ஆண்டிலிருந்து நாடாளுமன்றத்தைப்பிரதிநிதித்துவப்படுத்தும் நிஹால் கலப்பதி, 2004ஆம் ஆண்டிலிருந்து நாடாளுமன்றத்தைப்பிரதிநிதித்துவப்படுத்தும் லக்ஷ்மன் நிபுணாராச்சி ஆகிய இருவரையும் மறந்து பிரதி அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். நிஹால் கலப்பதி 1994இல் ஜே.வி.பி.யின் அரசுத் தலைவர் வேட்பாளராவார். அன்று அரசுத் தலைவர்யாவதற்கு கூட தகுதியானவராக இனங்காணப்பட்ட நிஹால் கலப்பதி, இன்று குறைந்தபட்சம் பிரதி அமைச்சராக பதவி வகிப்பதற்கு கூட தகுதியற்றவராகிவிட்டாரா என்று அரசுத்தலைவர்யிடம் கேட்கின்றோம்.

கொள்கலன் குறித்த விசாரணைகளின் சுயாதீனத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கு பிமல் ரத்நாயக்கவின் பதவி பறிப்பு மாத்திரம் போதாது. ரங்க திஸாநாயக்கவும் பதவி விலக வேண்டும் என்றார்.

## ஒரு வருட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று நடைபெற்ற ருவன்புர அதிவேக நெடுஞ்சாலையின் நிர்மாணப் பணிகளை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லல் தொடர்பான தனிநபர் பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

பெருந்தோட்ட பகுதிகளில் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் வீதிகள் இன்றும் புனரமைக்கப்படவில்லை. அபிவிருத்தி செய்யப்படவில்லை. எமது இருவருட ஆட்சியில் பொகவந்தலாவ வீதி நுவரெலியா டன்சன் வீதிகளையும் புனரமைத்தோம். எமது அரசாங்கத்தில் பெருந்தோட்ட வீதி அபிவிருத்திக்கு அதிகளவில் நிதி ஒதுக்கப் பட்டது. வீதி மற்றும் உட்கட்டமைப்புக்களை அபிவிருத்தி செய்தால் மாத்திரமே பொருள தாரத்தை மேம்படுத்த முடியும்.

அமைச்சர் ஒரு தவறான, பொய்யான விடயத்தை சபையில் குறிப்பிடும்போது அதனைச் சுட்டிக்காட்டி திருத்துவதற்கு முற்படும்போது எமக்குப் பேசுவதற்கு அனுமதி மறுக்கப்படுகிறது. எமது ஒலிவாங்கி துண்டிக்கப்படுகிறது. இது தவறானதொரு செயற்பாடு. தவறுகளை சுட்டிக்காட்ட எமக்கும் இடமளியுங்கள்.

2000 பேருக்கு வீடுகள் வழங்குவதாக அமைச்சர் குறிப்பிட்டது பொய் என்று நான் குறிப்பிடுகிறேன். வீடுகள் வழங்கவில்லை. ஒரு சான்றிதழ் பத்திரமே வழங்கப்படுகிறது. அந்தப் பத்திரத்துக்கு எவ்வித சட்ட மதிப்பும் கிடையாது.

அமைச்சராக நான் ஒருவருட காலம் பதவி வகித்தபோது 1300 இற்கும் வீடுகளை கட்டிமுடித்து அவற்றை கையளித்துள்ளேன். ஒருவருட காலத்தில் பெருந்தோட்ட பகுதியில் எத்தனை வீடுகளை ஆளும்தரப்பு கட்டியது என்று நேற்று (நேற்று முன்தினம்) கேட்டேன் , பதில் கிடைக்கவில்லை. இன்றும் (நேற்றும்) கேட்டேன் பதில் கிடைக்கவில்லை.

மனிதன் குரங்கில் இருந்து பரிமானமடைந்தான் என்பதற்கு ஆதாரமாக ஒரு உறுப்பினர் ஆளும் தரப்பில் உள்ளார். இந்த பக்கத்தில் இருந்து அந்த பக்கத்துக்கு கைலாகு கொடுப்பதற்கு தாவுகிறார். இது சபை முறைமை இல்லை. இவ்வாறான செயற்பாடுகளை திருத்திக் கொள்ளுங்கள்.

காணி உறுதிப்பத்திரத்தையே வழங்கவுள்ளீர்கள். அதில் 237 நான் தயாரித்தது. இதில் நீங்கள் தயாரித்தது எத்தனை? 2000 சான்றிதழ்களை வழங்கி வீடு வழங்குகிறோம் என்று ஏன் பொய்யுரைக்கின்றீர்கள். சம்பள அதிகரிப்பு கிடைக்குமா, கிடைக்காதா, ஒருவருடம் கடந்து விட்டது. ஏதும் கிடைக்கவில்லை.

சம்பள நிர்ணய சபை ஊடாக 1,700 ரூபாவை நாங்கள் வழங்கும் போது, அது வேண்டாம் 2,138 ரூபாய்தான் வேண்டும் என்று குறிப்பிட்டவர்கள் எங்கே? இந்த ஆதகங்கள் என்னிடமும் உள்ளது. அமைச்சர் சமந்த வித்யாரத்னவின் உரையில் எதிர்க்கட்சியின் உறுப்பினர்களை விமர்சித்தார். குற்றச்சாட்டுக்களை முன்வைத்தார். அவ்வாறாயின் உள்ளூராட்சிமன்றத் தேர்தலின் பின்னர் எதிர்க்கட்சிகளுடன் ஒன்றிணைந்து ஏன் உள்ளுராட்சிமன்றங்களை அமைத்தீர்கள். நாங்கள் கெட்டவர்கள், நீங்கள் நல்லவர்களா, கொஞ்சமாவது முதுகெலும்பு உங்களுக்கு இருக்க வேண்டும் என்றார்.

## போதைப் பொருள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் கஞ்சா செடி, போதை மாத்திரை, சட்டவிரோத சிகரெட்டுக்கள் ஆகியவற்றுடன் 101 நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

## ஐ.தே.க. ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைமைத்துவத்தில் ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்து இந்த ஒருமித்த பயணத்தை தொடரவுள்ளோம். இரு கட்சிகளும்அவற்றின்தனித்துவத்தன்மையை வெவ்வேறாக பாதுகாத்துக் கொண்டு இந்த வேலைத்திட்டத்தைநடைமுறைப்படுத்துவதற்கு தயாராகவுள்ளோம். அதற்கான முழுமையான அனுமதி கிடைக்கப் பெற்றுள்ளது என்றார்.

## இந்தியாவிடமிருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற ருவன்புர அதிவேக நெடுஞ்சாலையின் நிர்மாணப் பணிகளை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லல் தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இரத்தினபுரி மாவட்டத்துக்கு அதிவேக நெடுஞ்சாலையை அமைக்கும் முன்மொழிவு வரவேற்கத்தக்கது. நாங்கள் இதனை வரவேற்கிறோம். வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களைப் பொருத்தவரையில் போக்குவரத்து பிரதான அம்சமாக காணப்படுகிறது. போக்குவரத்து வசதிகளில் காணப்படும் குறைபாடுகள் மற்றும் சிக்கல்கள் இந்த இரண்டு மாகாணங்களும் அபிவிருத்தியடையாமல் இருப்பதற்குரிய பிரதான காணியாக உள்ளது.

2013 மற்றும் 2014 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மொனராகலை ஊடாக மட்டக்களப்புக்கு அதிவேக நெடுஞ்சாலையை அமைக்கும் முன்மொழிவு ஒன்று காணப்பட்டது. அதேபோல் தம்புள்ளை - வடக்குக்கான அதிவேக நெடுஞ்சாலை அமைக்கும் திட்டமும் காணப்பட்டது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு அதிவேக நெடுஞ்சாலைகளை அமைக்கும் திட்டம்குறித்தும்ஆளும்தரப்புகவனம்செலுத்த வேண்டும்என்றுகேட்டுக்கொள்கிறேன். கண்டி அதிவேக நெடுஞ்சாலை அமைப்பது வரவேற்கத்தக்கது. எமக்கும்அதுபயனானதாக இருக்கும்.

மீரிகம -கடவத்த அதிவேக நெடுஞ்சாலை

தொடர்ச்சி 6ம் பக்கம்....

காலைக்கதிர்
Kalaikkathir

# கீரி முந்தல் தீவுப் பகுதி கடலில் மூழ்கும் அபாயம்



(சியாஜ்)

கற்பிட்டி டச்பே கிராம உத்தியோகத்தர் பிரிவில் உச்சமுனை எனும் தீவில் வெள்ளைக்கார குடா எனும் இடத்தில் ஒரு பக்கம் பெருங்கடலாலும் மறுபக்கம் சிறுகடலாலும் சூழப்பட்டுள்ள ஒரு தொன்மை வாய்ந்த அழகான இடமாக கீரிமுந்தல் தீவு காணப்படுகின்றது. கி.மு 700 ஆம் நூற்றாண்டிலே மன்னார் மாதோட்டம், குதிரைமலை , துறைமுகவர்த்தக பெருந்தோட்ட வரலாற்றோடு மக்களின் வாழ்வியல் இங்கு தொடங்குகிறது.கற்பிட்டியில் இவ்வாறான வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கீரிமுந்தல்தீவு பகுதி மின்சார வசதிகளுடன் உப தபால் நிலையத்தையும் கொண்டுள்ளது.

அண்மைக்காலமாக பெருங்கடல் அலைகளின் ஆதிக்கம் அதிகரித்துள்ளதனால் பல ஏக்கர் குடியிருப்பு நிலம் கடலுக்கு இரையாகியுள்ளதாகவும் இதன் காரணமாக மீனவ சமூகம் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேற வேண்டிய துர்பாக்கிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாக தமது ஆதங்கத்தைவெளிப்படுத்தினர். இக்கிராம மீனவர்கள். இக் கீரிமுந்தல் தீவை பாதுகாக்கும் நோக்கில் கடல் அலைகளின் ஆதிக்கத்துக்கு தடை அமைக்கும் வண்ணம் கற்பாறைகளை கடல் ஓரமாக அமைத்து தருமாறு அரச அதிகாரிகள் மற்றும் அரசியல் தலைவர்கள் என பலரிடம்கோரிக்கைகள் விடுத்துள்ள போதும் இதுவரை அதற்கான முன்னேற்றகரமான எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என கவலை வெளியிட்டுள்ளனர்.

இது விடயமாக இலங்கை அரசுத் தலைவர்மற்றும் பிரதமர் ஆகியோரின் கவனத்திற்கு கொண்டு செல்வதற்கான நடவடிக்கைகளை ஆலய நிர்வாகத்தினர் மற்றும் அருட்தந்தை ஆகியோருடன் இணைந்து ஊர்மக்கள் முன்னெடுத்துள்ளமையும்குறிப்பிடத்தக்கது.

# பாதுகாப்பு குழுக் கூட்டம்

(சியாஜ்)

கற்பிட்டி பெரியகுடியிருப்பு கிராம உத்தியோகத்தர் பிரிவிற்கான பொதுபாதுகாப்புக் குழுக்கூட்டம் கிராம உத்தியோகத்தர் றியால்தலைமையில் வாழைத்தோட்டம் கூட்ட மண்டபத்தில் இடம்பெற்றது.

இதில் கற்பிட்டி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி திசாநாயக்க கலந்துகொண்டதுடன்பொலிஸாருக்கும் பொது மக்களுக்கு இடையிலான தொடர்பு மிகவும் தூரமாக்கபட்டதன் விளைவு எமது கற்பிட்டி பிரதேசத்தில் சட்ட விரோத கடத்தல் சம்பவங்கள் அதிகரித்துள்ளதோடு போதைப் பாவனையும்விற்பனையும்கணிசமாக அதிகரித்துள்ளது.

இது விடயத்தில் பொது மக்கள் விழிப்புணர்வோடுசெயற்படுமாறும் இச்சம்பவங்கள் பற்றிய தகவல்களை சரியான நேரத்திற்குபொலிஸாருக்கு வழங்கி ஒத்துழைப்பதன் மூலம் போதையற்ற சிறந்த நகரமாககற்பிட்டியை மாற்றியமைக்க முடியும் என்ற நம்பிக்கை தனக்கு உள்ளதாகவும்தெரிவித்தார்.

அத்தோடு ஒவ்வொரு மாதமும் கற்பிட்டி பெரியகுடியிருப்புக்கான பாதுகாப்புபொதுக் குழு கூட்டம் மாதத்தின் முதலாவது சனிக்கிழமை நடத்துவதற்கும்திட்டமிட்டுள்ளதாகவும் அதில் தவறாது கலந்து கொண்டு தமது பங்களிப்பைவழங்குமாறும் கேட்டுக் கொண்டார்.




# மார்பகப் புற்றுநோய் விழிப்புணர்வு நடைபவனி சாய்ந்தமருதுவில்

(நூருல் ஹுதா உமர்)

மார்பக புற்றுநோய் விழிப்புணர்வு வாரத்தை முன்னிட்டு ஒக்டோபர் 08 சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தினால் சிறப்புவிழிப்புணர்வு நடைபவனி ஒன்று இடம்பெற்றது.

சாய்ந்தமருதுசுகாதாரவைத்தியஅதிகாரி டாக்டர் மதன் தலைமையில் நடைபெற்ற இந்நடைபவனியில், மார்பகபுற்றுநோயைத் தடுக்கும் வழிமுறைகள், ஆரம்ப கட்ட அறிகுறிகளைஅறிதல்,மற்றும்முறையான பரிசோதனைகளின்முக்கியத்துவம்குறித்து விரிவானவிளக்கங்கள் வழங்கப்பட்டன.






இந்த நிகழ்வில் பொதுச் சுகாதார தாதிய சகோதரி, மேற்பார்வை பொது சுகாதாரமருத்துவ மாது, பொதுச் சுகாதார பரிசோதகர்கள், அபிவிருத்திஉத்தியோகத்தர்கள், டெங்கு களத்தடுப்பு ஊழியர்கள் மற்றும் அலுவலகஊழியர்களும் கலந்து கொண்டனர்.இந்நிகழ்வுமூலம்பெண்களின்உடல்நலப் பராமரிப்பில் மார்பக புற்றுநோயின்முக்கியத்துவத்தை வலியுறுத்தி, அனைவரும் ஆரோக்கியமான வாழ்வை நோக்கிமுன்னேறுவதற்கான உறுதியும் ஏற்படுத்தப்பட்டது.

# ஆசிரியர் தின விழா

(ஹுதா உமர்)

கல்முனை கல்வி வலய சாய்ந்தமருது லீடர் எம்.எச்.எம். அஸ்ரப்வித்தியாலயத்தில் சர்வதேச ஆசிரியர் தினம் ஒக்டோபர் 08 பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்று குழுவின் செயலாளர் ஹுதாவின் நெறிப்படுத்தலில் அதிபர்சம்சுதீன் தலைமையில் கொண்டாடப்பட்டது.

இந்தவிழாவில்கல்விதுறையில்சிறந்தபங்களிப்பு செய்த ஆசிரியர்கள் கௌரவிக்கப்பட்டனர். மேலும் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் பாடல்கள் மற்றும் கலை நிகழ்ச்சிகள்என்பன இடம்பெற்றதோடு அதிதிகளின் உரையும் இடம்பெற்றது.இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக பார்ட்னர்ஸ்போ சேன்ஜ் இன்டர்நேஷனல் சிரேஷ்ட நிகழ்ச்சித்திட்ட பணிப்பாளர் றிசாத்ஷெரீப் கலந்து கொண்டாதுடன்கௌரவ அதிதியாக கல்முனைகல்வி வலய பிரதிகல்வி பணிப்பாளரும், சாய்ந்தமருது கோட்டக்கல்வி பணிப்பாளருமான அஸ்மா கலந்து கொண்டதுடன் விசேட அதிதியாக சேவைக்கால





ஆசிரிய ஆலோசகர் றபீக் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# சமூக வலுவூட்டல் அலுவலர் நியமனம்; யாருக்கு முன்னரிமை வழங்கப்படும்?

(சர்ஜூன்)

பிரஜா சக்தி தேசிய செயற்திட்டத்தின் கீழ் சமூக வலுவூட்டல் உத்தியோகத்தர்களை கிராம ரீதியாக இணைக்கும் செயற்திட்டம் நாடு பூராகவும் நடைபெற்றுக் கொண்டு வருகின்றது.

அந்த வகையில் கிராமிய அபிவிருத்தி, சமூக பாதுகாப்பு மற்றும் சமூகவலுவூட்டுகை அமைச்சின் செயலாளரோடு அபிவிருத்தி உத்தியோகத் தர்களின் அனைத்து தொழிற்சங்கங்களின் கூட்டமைப்புக்குமிடையில் இடம்பெற்ற சந்திப்பு ஒக்டோபர் 08 பத்திரமுல்லையில் உள்ள அமைச்சில் இடம்பெற்றது.இக்கலந்துரையாடலில்கலந்துகொண்ட அம்பாறை மாவட்ட அபிவிருத்திஉத்தியோகத்தர்கள் தொழிற்சங்க தலைவர் கபீர் கலீல் பின்வருமாறும் தனது கோரிக்கையை அமைச்சின் செயலாளர் சம்பத் மந்ரீனாயக்காவிடம் முன்வைத்தார்.

அம்பாறை மாவட்டத்தில் உள்ள கரையோர பிரதேச செயலகங்களில் உள்ள சமூக வலுவூட்டல் உத்தியோகத்தர்களாக இணைப்பு செய்யும் போது 2012/2013 காலப்ப குதிகளில் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக நியமனக் கடிதம் உள்ளவர்களுக்குமுன்னுரிமைவழங்கப்படவேண்டும் என்பதோடு வெற்றிடமாகவுள்ள இடங்களுக்கு அபிவிருத்தி உத்தியோகத்தர்களை அவர்கள் நியனம் பெற்ற ஆண்டின்அடிப்படையில் முன்னுரிமை வழங்கப்படவேண்டும் என கோரிக்கை விடுத்தார். இக் கோரிக்கையை உடனடியாக அமைச்சின் செயலாளர் ஏற்றுக் கொண்டு மாவட்ட அரசாங்க அதிபருக்கு தான் அறிவிப்பதாகவும் தாங்கள் குறிப்பிட்டமுறைப்படியே நியமனம் வழங்கப்படும் எனவும் உறுதியளித்திருந்தார்.

அதேநேரம் அமைச்சின் மேலதிக செயலாளரிடம் அம்பாறை மாவட்டத்தில் உள்ளபொருளாதார உத்தியோகத்தர்களின் பெயர் பட்டியலை வழங்குமாறும் பணிப்புரைவழங்கி இருந்தார். இதேவேளை திட்டமிடல் பிரிவில் இணைப்பு செய்யப்படவிருக்கும்உத்தியோகத்தர்கள் சம்மாந்தமாக பின்னர் அறிவிக்கபட்டும் என்பதோடு அடுத்தவாரம் கிராமிய அபிவிருத்தி அமைச்சர் உபாலி பன்னிலகேவைசந்திப்பதற்கு நேரம் எடுத்து தருவதாகவும் குறிப்பிட்டு இருந்தார்.அத்துடன் அமைச்சின் மேலதிக செயலாளர் இந்த நியமனம் தொடர்பில் ஏதாவதுபிரச்சினைகள் ஏற்பட்டால் இது விடயமாக தொழிற்சங்க தலைவர் கபீர் கலீலோடுதொடர்பு ஏற்படுத்துவதாக குறிப்பிட்டு இருந்தமை குறிப்பிடத்தக்கது.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## சட்டத்தின் நிழலில் ஊழல் பேரரசு

பூஸா உயர்பாதுகாப்புச் சிறையில் நடத்தப்பட்ட கூட்டு சோதனையில் நேற்று 29 கைப்பேசிகள் மீட்கப்பட்டுள்ளன என்பது ஓர் அதிர்ச்சித் தகவல். சிறை நுண்ணறிவு பிரிவும் சிறப்பு அதிரடிப்படையும் இணைந்து மேற்கொண்ட இந்தச் சோதனையின்போது, கொலைத் தண்டனை கைதி "தெமட்டகொட சமிந்தா", போதைப் பொருள் கடத்தல் குற்றச்சாட்டில் தண்டிக்கப்பட்ட "வெல்லே சுதா", மற்றும் அமைப்புசார்ந்த குற்றவாளி "ருவான்" ஆகியோரின் அறைகளில்கூட கைப்பேசிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

சிறைச்சாலைக்குள் இத்தனை மொபைல்கள் இருப்பது சாதாரண நிகழ்வல்ல. இது சிறை நிர்வாக அமைப்பே ஊழல் வலையில் சிக்கி, அதன் பாதுகாப்பு முறைகள் முற்றிலும் தோல்வியடைந்துள்ளதற்கான தெளிவான சான்றாகும்.

### வேலியே பயிரை மேய்கிறது

போதைப் பொருள் வலையமைப்புகள், பெரிய குற்றவாளிகள், மற்றும் சிறைச்சாலையின் சில அதிகாரிகள் — இவர்கள் எல்லாம் இன்று ஒரே வட்டத்தில் செயல்படுகின்றனர். சில சிறை அதிகாரிகள் தங்கள் சொந்த கைப்பேசிகளை கைதிகளுக்கு "வாடகைக்கு" விடுகின்றனர். ஒவ்வொரு அழைப்பிற்கும், குறுஞ்செய்திக்கும், அல்லது தரவு பயன்பாட்டிற்கும் ஒரு "தரநிலை கட்டணம்" வசூலிக்கப்படுகிறது.

உயர் தர சேவையாக "பிரீமியம் பாக்கேஜ்" எனப்படும் திட்டங்களும் உள்ளன — முழுமையான ஸ்மார்ட் கைப்பேசி, தினசரி மின்சாரம் வழங்கும் வசதி, மற்றும் இணைய இணைப்பு ஆகியவை அடங்கும். இப்படி சிறைச்சாலைகள் சட்டத்தின் கோயிலாக அல்ல, குற்றவாளிகளின் "பணியகம்" போல மாறி விட்டன.

### ஒரு அறிகுறி

சமீபத்திய சோதனையில் 29 கைப்பேசிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ஆனால் இது பிரச்சினையின் வேரை அல்ல, அதன் அறிகுறியை மட்டும் காட்டுகிறது. ஒவ்வொரு முறை சோதனைக்குப் பிறகும் பல மொபைல்கள் மீட்கப்படுகின்றன. இது சிறைச்சாலையின் கண்காணிப்பு முறைகள் ஒரு "கண்ணாடிக் காட்சி" மாதிரி மட்டுமே என்பதைக் காட்டுகிறது.

பாதுகாப்பு அமைச்சும் நீதித்துறை அமைச்சும் இதை வெறும் "செயல்திறன் அறிக்கை" போலக் காணாமல், ஒரு கட்டமைப்புசார்ந்த மாற்றத்திற்கான அறிகுறியாகப் பார்க்க வேண்டும்.

### நாசகார வேர்கள்

இது சிறைகளில் மட்டுமல்ல. போதைப் பொருள் வியாபாரம் சுங்கத் துறை, குடியேற்றம், காவல்துறை, மற்றும் வழக்குத் துறைகளில்கூட ஊடுருவியுள்ளது. இதைத் தடுக்க "நிதி தடய ஆய்வுகள்" (Forensic audits) அவசியம். சிறை அதிகாரிகள் மட்டுமல்ல, சுங்க அதிகாரிகள், குடியேற்ற அதிகாரிகள், மற்றும் சில விசாரணை அதிகாரிகளும் கண்காணிக்கப்பட வேண்டும்.

நாட்டைச் சீர்செய்ய விரும்பும் ஒரு அரசுக்கு இது ஒரு அவசியமான ஆரம்பம். ஆனால் கேள்வி இதுதான் — யார் இதைச் செய்வார்கள்? காவல்துறையா? அதுவும் சோதிக்கப்பட வேண்டிய அமைப்பே அல்லவா?

### பாழாக்கும் பெரும் நோய்

பூஸா சிறைச்சாலை சம்பவம், நமது சட்ட அமைப்பின் உடல் நலனில் ஏற்பட்டுள்ள தீவிர நோயைக் காட்டுகிறது. சிறைச்சாலைகள் குற்றவாளிகளைச் சீர்திருத்தும் இடமாக அல்லாமல், குற்ற வலையமைப்புகளை இயக்கும் "மைய அலுவலகம்" போல மாறியுள்ளன. இதன் விளைவாக, சிறையில் உள்ளவர்கள் கூட வெளியில் இருக்கும் குற்றச்செயல்களை வழிநடத்துகின்றனர்.

இது ஒருசில அதிகாரிகளின் தவறல்ல; இது ஒரு பண்பாட்டு வீழ்ச்சி. ஊழல் ஒரு பண்பாக மாறியிருக்கிறது. "சிறைச்சாலை" என்ற சொல் இனி பாதுகாப்பின் அடையாளமாக இல்லை, அரசின் தோல்வியின் அடையாளமாக மாறியுள்ளது.

### தெளிவான தீர்மானம் தேவை

இப்போது நாட்டின் தலைவரின் கையில்தான் சுத்திகரிப்பு கம்பி உள்ளது. சிறைகள், காவல்துறை, சுங்கம், குடியேற்றம் — இவற்றை முழுமையாக சீர்திருத்தும் ஒரு புதிய தேசிய நடவடிக்கை அவசியம்.

இந்த முறை, பெயர் மட்டும் மாற்றி அலுவலகங்கள் திறப்பது போதாது. ஒரு உண்மையான "நீதித் திருப்பம்" தேவை.

ஒரு நாகரிக நாடாக இருப்பது, சட்டம் அனைவருக்கும் சமமானதாக இருப்பதில்தான். சிறைச்சாலை சுவர்களுக்குள் இருந்து சட்டம் வெளியேறத் தொடங்கியிருக்கும் இக்காலத்தில், நாம் அனைவரும் ஒரு கேள்வி கேட்க வேண்டும் —

நமது நாட்டில் சட்டம் யாரை பாதுகாக்கிறது? குற்றவாளிகளையா? அல்லது குடிமக்களையா?

# கல்லோயா ஆற்றுப் பிரிவின் பெரும் போக தொடக்க கூட்டம்

(சர்ஜுன் லாபீர்)

கல்லோயா ஆற்றுப் பிரிவின் பெரும்போக நெற் செய்கையினை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கான ஆரம்ப விவசாய குழு கூட்டம் ஒக்டோபர் 09 சம்மாந்துறை அப்துல் மஜீட் மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வானது சம்மாந்துறை பிரதேச செயலாளர் ஹனீபாவின் ஒருங்கினைப்பில் கீழ் அம்பாறை மாவட்ட செயலாளர் சிந்தக அபயேவிக்ரம தலைமையில் இடம்பெற்றது.





இக் கூட்டத்தில் பெரும்போகத்திற்கான விதைப்புகாலம், நிர்விநியோகம், பயிர்காப்புறுதி, விதைக்கும் நெல்லினம், மாடுகளை அப்புறப்படுத்தல், கிளைவாய்க்கால் துப்பரவு போன்ற விடயங்களுக்கான கால அட்டவணையும் தீர்மானிக்கப்பட்டது. மேலும் இக் கூட்டத்தில் கல்முனை நீர்பாசன திணைக்கள பிரிவில் 10786 ஏக்கர் காணிகளும் அக்கரைப்பற்று நீர்பாசன காரியாலயத்தில் வீரயடி பிரிவில் 3897 ஏக்கர்காணிகளும், சம்மாந்துறை நீர்பாசன திணைக்கள பிரிவில் 22256 ஏக்கர்காணிகளும் இம்முறை பெரும்போக விவசாய செய்கைக்காக ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. இதன்படி கல்முனை நீர்பாசன பிரிவில் ஒக்டோபர் 25 தொடர்க்கம் நவம்பர் 25 வரை விதைப்புக் காலமாக தீர்மானிக்கப்பட்டுள்ளதோடு விதைக்கும் நெல்லினம் 3 தொடர்க்கம் 3 1/2 மாதம் கொண்ட நெல்லினமாக தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அக்கரைப்பற்று நீர்பாசன பிரிவில் ஒக்டோபர் 20 தொடக்கம் நவம்பர் 20 வரை விதைப்புக் காலமாக தீர்மானிக்கப்பட்டுள்ளதோடு விதைக்கும் நெல்லினமாக 3 தொடர்க்கம் 3 1/2 மாதம் கொண்ட நெல்லினமாக தீர்மானிக்கப்பட்டுள்ளது. சம்மாந்துறை நீர்பாசன பிரிவில் ஒக்டோபர் 20 தொடக்கம் நவம்பர் 20 வரை விதைப்புக் காலமாக தீர்மானிக்கப்பட்டுள்ளதோடு விதைக்கும் நெல்லினமாக 3 தொடர்க்கம் 3 1/2 மாதம் கொண்ட நெல்லினமாக தீர்மானிக்கப்பட்டுள்ளது. மேற்படி கூட்டத்தில் அம்பாறை மாவட்ட பிரதம கணக்காளர் மஹ்ரூப், மாவட்ட செயலக திட்டமிடல் பணிப்பாளர், சம்மாந்துறை பிரதேச, இறக்காமம் பிரதேச, கல்முனை பிரதேச செயலக திட்டமிடல் பணிப்பாளர்கள், நீர்ப்பாசன திணைக்கள மாவட்ட பணிப்பாளர் மற்றும் பொறியிலாளர்கள், கமநல திணைக்கள உயர் அதிகாரிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

# கல்முனை மாநகர சபையின் சேவைகளை மேம்படுத்த முயற்சி

(அஸ்லம் மௌலானா)

கல்முனை மாநகர சபையின் சேவைகளை மேம்படுத்துவதற்கு பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இதன் ஓர் அங்கமாக புதிய ட்ரக்டர் ஒன்று கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.




கிழக்கு மாகாண சபையின் ஊணறீம்றூ திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி மற்றும் கல்முனை மாநகர சபையின் நிதிப் பங்களிப்புடன் கொள்வனவு செய்யப்பட்ட இந்த ட்ரக்டர் குறித்த நிறுவனத்தினால் ஒக்டோபர் 09 மாநகர ஆணையாளர் றாபியிடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டது.



இந்த நிகழ்வில் கல்முனை மாநகர சபையின் உள்ளூராட்சி உத்தியோகத்தர் சர்ஜுன் தாரிக் அலி, பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர், பரமேஸ்வரவர்மன், தொழில்நுட்ப உத்தியோகத்தர்களான சுகுமார், நுஷைர் அஹமட், சுதர்ஷன், அபிவிருத்தி உத்தியோகத்தர், முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் உட்பட மாநகர சபை உத்தியோகத்தர் பலரும் பங்கேற்றிருந்தனர்.

# மோ. சைக்களில் மாணவர்கள் இனி தலைக்கவசம் அணிவது கட்டாயம்

## கல்முனையில் பொலிஸார் அறிவிப்பு

(பாறுக் ஷிஹான்)

கல்முனை தலைமையக பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கல்முனை வலயக் கல்வி அலுவலகத்திற்குட்பட்ட பாடசாலைக்கு செல்லும் மாணவ மாணவிகள் தங்களது பாதுகாப்பு கருதி கட்டாயமாக பாதுகாப்பு தலைக்வசம் அணிந்து செல்லுமாறு கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி லசந்த களுவாராய்ச்சி அறிவித்துள்ளார்.

கல்முனை வலயக் கல்வி பணிப்பாளருக்கு இவ்விடயம் தொடர்பில் அவர் அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். பாடசாலைக்கு செல்லும் மாணவ மாணவிகள் தங்களது பாதுகாப்பு கருதியும் மற்றும் வீதிபோக்குவரத்து சட்டங்களை அறிவுறுத்தல் செய்யுமாறும் வேண்டிக் கொள்வதோடு இவ் சட்ட திட்டங்களை மீறும் பட்சத்தில் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அதில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் வலயக் கல்வி அலுவலகத்திற்குட்பட்ட பாடசாலை மாணவ மாணவிகளை பாடசாலை ஆரம்பத்திலும் முடிவிலும் ஒரு ஒழுங்குபடுத்தல் செய்து வீதிபோக்குவரத்து காப்பாளர்களை நியமிக்குமாறும் மற்றும் பாடசாலை அதிபர்களுக்கு அறிவுறுத்தல் கொடுக்குமாறும் அவர் கேட்டுக்ளார்.

எனினும் வலயக் கல்வி அலுவலகத்திற்குட்பட்ட பாடசாலை ஆசிரியர்கள் ஒருசிலர் பாடசாலை வருகின்ற போது தலைக்கவசம் இன்றி மோட்டார் சைக்கிளில் செல்வது அவதானிக்கப்பட்டுள்ளமையும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

# பால்நிலை வன்முறை தொடர்பான கூட்டம்

(நூருல் ஹூதா உமர்)

இறக்காமம் பிரதேச சிறுவர்களின் உரிமை, பாதுகாப்பு, அபிவிருத்தி, சிறுவர்நலன் மேம்பாடு மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறைகள்,பெண்கள் எதிர்நோக்கும் துஷ்பிரயோகங்கள், அவர்களின் பாதுகாப்பு, ஆரோக்கியம் என்பவை தொடர்பாக காலாண்டுக்கு ஒரு முறை பிரதேச சிறுவர் அபிவிருத்தி மற்றும் பால்நிலை வன்முறை தடுப்பு குழு கூட்டத்தில் ஆராயப்பட்டு வருகின்றது.

அந்த வகையில், 2025 ஆம் வருடத்தின் மூன்றாம் காலாண்டுக்கான பிரதேசசிறுவர் கண்காணிப்பு மற்றும் பால்நிலை வன்முறை தொடர்பான செயற்குழுகூட்டம் இறக்காமம் பிரதேச செயலக சிறுவர் உரிமைகள்மேம்பாட்டு உத்தியோகத்தர் யசோதாவின் ஒருங்கிணைப்பில்நிருவாக உத்தியோகத்தர் முஹம்மட் றஸாக் தலைமையில்இறக்காமம் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இக்கூட்டத்தில் பிரதேச சிறுவர்களின் உரிமை மற்றும் பாதுகாப்பு என்பவற்றைஉறுதிப்படுத்தும் நோக்கில், பாடசாலை இடைவிலகல், கல்வி ரீதியானபிரச்சினைகள், பாடசாலை மாணவர்களின் பாதுகாப்பு, பிரத்தியேக கல்விநடவடிக்கைகள், சிறுவர்களை மையப்படுத்திய போதைப் பாவனை, இளவயது திருமணம்,சிறுவர்களின் சுகாதார மேம்பாடு, விசேட தேவையுடைய சிறுவர்களின் நலனோம்பல்தொடர்பான விடயங்கள் மற்றும் கிராம மட்ட சிறுவர் அபிவிருத்தி குழுவின்2025 ஆம் ஆண்டில் இரண்டாம் காலாண்டு வருடத்திற்கான செயற்பாடுகள் தொடர்பாககலந்துரையாடப்பட்டன.

இந்த கூட்டத்திற்கு இறக்காமம் பிரதேச சபை தவிசாளர் சார்பாக உறுப்பினர் சாகீர் மற்றும் பொலிஸ் நிலைய குற்றவியல் பிரிவு பொறுப்பதிகாரி,வலயக் கல்வி பணிமனையின் உதவி கல்வி பணிப்பாளர், சமூக சேவை உத்தியோகத்தர், சிறுவர் நன்னடத்தை திணைக்களம் என பலரும் கலந்து கொண்டனர்.

# கல்முனை மாநகரில் வாணி விழா



கல்முனை மாநகர சபையில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த வாணி விழாஒக்டோபர் 07 மாநகர சபை கூட்ட மண்டபத்தில் நடைபெற்றது.மாநகர சபை பொறியியல் பிரிவின் பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்ரஜினி சயானந்கள் தலைமையிலும் பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் பரமேஸ்வர வர்மனின் நெறிப்படுத்தலிலும் இடம்பெற்ற இந்நிகழ்வில் மாநகரசபையின் கணக்காளர் மனாஸிர் அஹ்சன் விசேட அதிதியாக கலந்து சிறப்பித்தார்.

இதன்போது சிவசிறி ஹரிஹரன் குருக்கள் ஆசியுரை வழங்கியதுடன் நவராத்திரி பூஜைகளையும் நடத்தி வைத்தார்.மாநகர சபையின் களஞ்சியப் பொறுப்பாளர் மகேந்திரராசா நன்றியுரை நிகழ்த்தினார். இந்த நிகழ்வில் மாநகர சபையின் பிரிவுத் தலைவர்கள் மற்றும்உத்தியோகத்தர்களும் ஊழியர்களும் பங்கேற்றித்தனர். இந்த நிகழ்வுக்குமுஸ்லிம் மற்றும் கிறிஸ்தவ உத்தியோகத்தர்களும் முழுமையாக ஒத்துழைப்புவழங்கி நிகழ்வில் கலந்து கொண்டிருந்தமை சிறப்பம்சமாகும்.



# கிழக்கு மாகாணத்தில் ஒக். 09 சர்வதேச முதியோர் தின நிகழ்வு

(சக்திவேல்)





கிழக்கு மாகாண சமூக சேவை திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட கிழக்கு மாகாணத்திற்கான சர்வதேச முதியோர் தின பிரதான நிகழ்வு ஒக்டோபர் 09 கிழக்கு மாகாண ஆளுநர் ஜெயேந்தலால் ரத்தின சேகரதலைமையில் மட்டக்களப்பு மாநகர சபை மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன்போது மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிகமானவயதிற்குமேற்பட்டமூன்றுமுதியவர்கள் கிழக்கு மாகாண ஆளுநரினால் பொன்னாடை போர்த்திமலர்மாலைஅணிவித்து பண பரிசல்கள் வழங்கப்பட்டுகௌரவிக்கப்பட்டனர்இந்நிகழ்விற்கு சிறப்பு அதிதிகளாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர்அருள்ராஜ் மற்றும் மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திசாநாயக்க கலந்து கொண்டதுடன், மாகாண அமைச்சின் செயலாளர்கள், அரசஉயர் அதிகாரிகள், முதியவர்கள், பொதுமக்கள், என பலர் கலந்து கொண்டனர்.

உங்கள் கனவை நனவாக்க ...!
NVQ Level 3 & 4 Courses
புதிய பிரிவுகள் ஆரம்பம் 20.04.2025
கற்கும் போதே தொழில் ஆற்றக் கூடிய வாய்ப்பு
●CARE GIVER COURSE (பராமரிப்பாளர் பயிற்சி)
●NURSE ASSISTANT COURSE (தாதிய உதவியாளர் பயிற்சி)
கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன் 3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்
தகுதி:
●வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
●ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
●GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி

JDR HEALTH CARE (PVT) LTD
JDR PARAMEDICAL ACADEMY
46, Brodie Lane , Jaffna.
தொடர்பு:070 7070 722

காலைக்கதிர் Kalaikkathir

## இந்தியாவிடமிருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அபிவிருத்திகருத்திட்டத்துக்குசீனாவிடமிருந்து 500 மில்லியன் டொலர் கடன் பெற ஆளும்தரப்பு தீர்மானித்துள்ளது. இந்த கடன் குறித்து அரச நிதி பற்றிய குழுவின் தலைவர் ஹர்ஷ டி சில்வா குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பில் ஆளும்தரப்பு விசேட கவனம் செலுத்த வேண்டும்.

சீனா கடன் வழங்கும் போது அதனை பெற்றுக்கொள்ள ஆளும்தரப்பு முன்னிலையாகுகிறது. காங்கேசன்துறை துறைமுகத்தை அபிவிருத்தி செய்வதற்கு இந்தியா 63 மில்லியன் டொலரை வழங்குவதற்கு முன்வந்தபோது ஆளும்தரப்பு அதனை பெற்றுக்கொள்ளவில்லை. அந்த அமைச்சர் தான் தற்போது துறைமுக அமைச்சில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்.

சீனாவுடன் கடந்த அரசாங்கங்கள் மோசடியான கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபட்டதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மீது தற்போதைய ஜனாதிபதி சீனா கொடுக்கல் வாங்கலை தொடர்புப்படுத்தி குற்றஞ்சாட்டினார். இன்று அந்த நிறுவனங்களுடன் கொடுக்கல் வாங்கலில் ஈடுபட ஆளும்தரப்பு தீர்மானித்துள்ளது. இந்த அரசாங்கமும் கடந்த அரசாங்கங்களை போன்று செயற்பட போகிறதா என்றார்.

## ஏக்கிய ராஜ்ய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இணங்கியிருந்தன. தமிழர்களின் தீர்வு ஒற்றையாட்சிக்குள் முடக்கப்படக்கூடாது, 13ஐ தொடக்கப் புள்ளியாகக்கொண்டு நகர்த்த முடியாது எனச் சொல்லியே தமிழ் தேசிய கூட்டமைப்பில் இருந்து வெளியேறினோம். இந்நிலையில் அந்த உண்மையை மூடி மறைக்க நாங்கள் சமஷ்டிக் கட்சி எனவும் காங்கிரஸ் ஒற்றையாட்சியை ஏற்றுக்கொண்டது எனவும் தமிழ் அரசுக் கட்சி கடந்த 16 வருடங்களாக மக்கள் மத்தியில் பொய் பரப்புரை செய்தனர். இப்போது அது பொய் என்பதை தமிழ் அரசுக் கட்சி தலைவர் தனது அறிவுக்கு ஏற்ற வகையில் ஒப்புதல் வாக்குமூலமாக வழங்கியுள்ளார். அதனை வழங்கிய கால கட்டம் மிக முக்கியமானது' என்று தெரிவித்திருந்தார். அதற்குப் பதிலளிக்கும் விதமாக யாழ்ப்பாணத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசியபோது சிவஞானம் இதனை தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அரசமைப்பின் 13ஆம் திருத்தத்தையும் குழப்பி 'ஏக்கிய ராஜ்ய' மற்றும் ஒற்றையாட்சி என இரண்டையும் குழப்பி வருகிறார். மாகாண சபை 38 வருடமாகத் தோல்வியடைந்த முறை என சொல்கிறார்.

மாகாண சபை சட்டத்தின் மூலம்தான் தற்போது உள்ள உள்ளூராட்சி சபைகள் முறைமை காணப்படுகின்றது. நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் கஜேந்திரகுமாரின் கட்சியும் போட்டது. அது ஒற்றையாட்சி இல்லை என சொல்கிறாரா என விளங்கவில்லை.

கஜேந்திரகுமார் முடக்கம் முடக்கம் என சொல்கிறார். ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக்குக் கடிதம் எழுதி முடக்கக் கூடாது என கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கூறுகிறார்.

1987க்கு முன்னர் நாடாளுமன்றக் கட்டமைப்புக்கு பிறகு உள்ளூராட்சி சபை முறைமைதான் காணப்பட்டது. 1988க்குப் பின்னர் அரசமைப்பின் 13ஆம் திருத்தச் சட்டத்தின் மூலம் ஒரு கட்டமைப்பாக மாகாண சபை கொண்டுவரப்பட்டது.

நாடாளுமன்றுக்கு அடுத்த உப சட்டவாக்க அலுவலகமாக அது காணப்பட்டது. 13ஆம் திருத்தமும் மாகாண சபையும் எமது அரசியல் அபிலாசைகளுக்குத் தீர்வு அல்ல. எமது கட்சியின் நிலைப்பாடும் அதுவே.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளரின் அறிக்கை உள்ளக விசாரணையை வலியுறுத்துவது எமக்கு ஏமாற்றமளிக்கிறது என ஐ.நா. மனித உரிமைகள்பேரவையின்உறுப்புநாடுகளுக்கு எழுதிய கடிதத்தில் சொல்லியிருக்கிறோம். இந்த கடிதம் நானும் சுமந்திரனும் மட்டும் கையொப்பம் வைத்து அனுப்பிய கடிதம் அல்ல. எமது கட்சியின் எட்டு நாடாளுமன்ற உறுப்பினர்களும் கையொப்பம் வைத்துள்ளனர்.

சமஷ்டி முறையிலான அரசியல் தீர்வை ஆளும்தரப்பு நடைமுறைப்படுத்த வலியுறுத்தவேண்டும் என அந்தக்கடிதத்தில் வலியுறுத்தியுள்ளோம். பிறகு எவ்வாறு தமிழ் அரசுக் கட்சி சமஷ்டியைக் கைவிட்டு விட்டதாகக் கூறமுடியும்?

'ஏக்கிய ராஜ்ய' நாடாளுமன்றத்துக்கு கொண்டு வரப்பபட்டால் இலங்கை தமிழ் அரசுக் கட்சி எதிர்த்து வாக்களிக்கும். அதேவேளை 'ஏக்கிய ராஜ்ய' ஒற்றையாட்சியும் அல்ல சமஷ்டி ஆட்சியும் அல்ல என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்து கொள்கிறோம். ஒருமித்தநாடு என்றால் ஒருநாடா? ஒன்றுக்கு மேற்பட்டவையையே ஒருமித்தநாடு என்பார். தமிழ் அர்த்தத்தை விட்டு சிங்களத்தைப் பிடித்துக்கொண்டிருக்கிறார்கள். எனக்கு போதிய அறிவு இருக்கிறது. எனக்கு விளங்காது என கஜேந்திரகுமார் நினைப்பது பொருத்தமற்றது.

அண்மையில் மாகாணசபைத்தேர்தலில் போட்டியிடுவீர்களா என ஊடகவியலாளர்கள் கேள்வி கேட்டபோது இல்லை கேட்க மாட்டோம் என சொல்லி இருக்கலாம் தானே. அங்கு நான் முதல்வர், உறுப்பினர் என போட்டியிடுகின்றனர். போட்டியிடுவது பற்றி தெளிவாக சொல்லலாமே ஏன் மழுப்புகின்றார்.

எங்கள் கட்சியின் கொள்கையான சமஷ்டி வழிக்கு வந்த கஜேந்திரகுமாருக்கு நன்றி. சமஷ்டியை நாங்கள் விட்டுக்கொடுக்கவில்லை. தமிழ் அரசுக் கட்சியை மலினப்படுத்தி அழித்து விடலாம் என்பது பகல்கனவே. தந்தை செல்வா போய் விட்டார். நாங்களும் போய் விடுவோம். ஆனால் தமிழ் அரசுக் கட்சி பலமாகத் தொடர்ந்து தமிழ் மக்கள் நலனுக்கு குந்தமிழைக்காத வகையில் செயற்படும். எங்களை அடிப்பதில் மினக்கெடாமல் செயற்படுங்கள் - என்றார்.

# கல்முனைச் சந்தையில் திரியும் கட்டாக்காலிகளை கட்டுப்படுத்துக

## வர்த்தக சங்கத்தினர் கோரிக்கை

(பாறுக் ஷிஹான்)

கல்முனை மாநகர பொதுச்சந்தையில் காலை மாலை வேளைகளில் சுற்றித்திரியும்கட்டாக்காலி மாடுகளை கட்டுப்படுத்துவதற்கு கல்முனை மாநகர சபை நடவடிக்கைஎடுக்கவேண்டும் என கல்முனைமாநகரபொதுச்சந்தைவர்த்தகசங்க பிரதிச்செயலாளர் றாயீஸ் குறிப்பிட்டுள்ளார்.

கல்முனை மாநகர பொதுச் சந்தையில் ஏற்பாடு செய்த விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு இவ்வாறு தெரிவித்தார். அம்பாறை மாவட்டம் கல்முனை மாநகர மத்தியில் பட்டப்பகலில் கட்டாக்காலிமாடுகள் சுற்றித்திரிகின்றன. இதனால் பிரதான வீதியில் பயணிக்கும் மக்கள்அசௌகரியங்களுக்குள்ளாவதுடன் வாகனங்களில்பயணிப்போர்விபத்துகளுக்கும் முகம் கொடுத்துவருகின்றனர்.

இது தவிர கல்முனையில் நடக்கும் வீதி விபத்துக்களில்இக்கட்டாக்காலிமாடுகளினாலும் அதிகமான விபத்துச்சம்பவங்கள் ஏற்பட்டுவருகின்றன. குறிப்பாககல்முனையில்மக்கள்அதிக நடமாட்டம் உள்ள பொதுச்சந்த, நகரின்கடைத் தொகுதிகள் அமைந்துள்ள மத்திய பகுதிகள், பஸ்தரிப்புநிலையம்,வங்கிகள், பாடசாலைகள், தனியார் கல்வி நிறுவனங்கள் ஆகியவை அமைந்துள்ளபகுதிகளில் இம் மாடுகள் சுற்றித்திரிகின்றன.

கடந்தகாலங்களில்கல்முனைமாநகரசபையினால்கட்டாக்காலிமாடுகளைகட்டுப்படுத்தும் திட்டம் கொண்டுவரப்பட்டபோதிலும் அவை முறையாகஅமுல்படுத்தப்படவில்லை. எனவே கட்டாக்காலி மாடுகளை கட்டுப்படுத்துவதற்கானமுறையான திட்டம் ஒன்றை வகுத்துச் செயற்படவேண்டும் என அவர் கோரிக்கைவிடுக்கின்றனர்.

# மாலதியின் நினைவேந்தல் வவுனியாவில் நிகழ்வுகள்

(வசந்தன்)



முதல் பெண் மாவீரர் மாலதியின் 38ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைமை அலுவலகத்தில் இடம்பெற்றது.

பெண்கள் எழுச்சி நாளாகவும் இது மேற்கொள்ளப்பட்டது.

1987 ஒக்டோபர் 10 இந்திய அமைதிப் படைக்கு எதிராக யாழ்ப்பாணம், கோப்பாய் பகுதியில் போராடி மாலதி வீரச்சாவடைந்தார்.

அவரதுநினைவுநாளில்அவரதுதிருவுருவப் படத்திற்குமாலைஅணிவித்தும்,தீபம்ஏற்றியும், மலர் தூபியும் அஞ்சலி செலுத்தப்பட்டது. நிகழ்வில் தமிழ் தேசிய மக்கள் முன்னனியின் செயலாளரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் மற்றும் கட்சி உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டனர். (100)



காலைக்கதிர் Kalaikkathir

# மன நலத் தினத்தை முன்னிட்டு செட்டிபாளையத்தில் நடைபவனி

(சக்திவேல்)

சர்வதேச மன நலத் தினத்தை முன்னிட்டு செட்டிபாளையம் பிரதேச வைத்தியசாலையின்ஏற்பாட்டில் மக்களுக்குவிழிப்புணர்வைஏற்படுத்தும் வகையில் நடைபவனி நேற்று இடம்பெற்றது.

செட்டிபாளையம் பிரதேச வைத்தியசாலையின் பொறுப்பதிகார வைத்தியர் ஜீவிதா தலைமையில் இடம்பெற்றஇந்நடைபவனியில்பல்வேறு வாசகங்கள் அடங்கியபதாகைகளை ஏந்தியவாறு வைத்தியசாலை உத்தியோகத்தர்கள், பாடசாலை மாணவர்கள்,வைத்தியசாலை நிருவாகத்தினர், உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.



# ஐங்கரன் விக்கினேஸ்வராவின் 6 நூல்கள் மெல்போர்னில் வெளியீடு




ஐங்கரன்விக்கினேஸ்வராவின்ஆறுநூல்களான "தேசிய சுய நிர்ணயமும் ஐரோப்பிய சிறுபான்மை இனங்களும்", "இலத்தீன் அமெரிக்காவில் தேசிய இன முரண்பாடுகள்", "ஆபிரிக்க தேசிய இனங்களும் சுயநிர்ணய விடுதலையும்", "முரண்பாடுகள் முற்றிய அரபுலகின் தேசிய இனங்கள்", "தென்கிழக்காசிய விடுதலைப் போராட்டங்கள்", "இந்தியாவில் தேசிய இன எழுச்சியும் வீழ்ச்சியும்" ஆகிய நூல்களின் வெளியீடு ஒக்டோபர் 25 இடம்பெற்றவுள்ளது.

வலென் மத்திய கலை மண்டபம்,வெர்மான்ட் மேல்நிலைக் கல்லூரி,27-63 மொராக் சாலை, வெர்மான்ட், விக்டோரியா 3133. எனும் முகவரியில் உள்ள மண்டபத்தில் மாலை முதல் இவ் வெளியீட்டு நிகழ்வு நடைபெற உள்ளது.இந்நிகழ்வு ஸ்ரீகந்தராசா தலைமையில் நடைபெற உள்ளதுடன் இந்நூல் வெளியீட்டுவிழாவில்நூலாசிரியர்அறிமுகஉரையை ரமேஷ் பாலா உரையாற்றுவார்.

அத்துடன் நூல்களின் ஆய்வுரைகளை மெல்போர்ண் இலக்கிய ஆர்வலர்கள் வழங்குவார்கள். தென்கிழக்காசிய விடுதலைப் போராட்டங்கள் எனும் நூலுக்கு ராஜா கருப்பையா நூலாய்வுரை நிகழ்த்துவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஏழாம் கிராமம் கணேசா வித்தி. மாணவர்களுக்கு கற்றல் உதவி

( காரைதீவு சகா)

சம்மாந்துறைவலயத்திலுள்ள மிகவும் பின்தங்கிய நாவிதன்வெளி பிரதேச ஏழாம் கிராமம் கணேசாவித்தியாலய மாணவர்களுக்கு ஒரு தொகுதி கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

அவுஸ்திரேலிய காரைதீவு மக்கள் ஒன்றியம் அமைப்பின் தலைவர் கந்தசாமி பத்மநாதனின்வழி நடத்தலில், அமைப்பின் ஆரம்பகால உறுப்பினரும் உபதலைவருமான பிரபல கட்டடக் கலைஞருமான அரசரெத்தினம் மகேந்திரன் இத் திட்டத்திற்கு ஒருங்கிணைப்பையும் முழு நிதியுதவியையும் வழங்கியிருந்தார்.இந்நிகழ்வு , குறித்த பாடசாலையில் அதிபர் கார்த்தியாயினி தலைமையில் ஒக்டோபர் 08 நடைபெற்றது.

பிரதம அதிதியாக சம்மாந்துறை வலயக்கல்விப் பணிப்பாளர் மகேந்திரகுமார்கௌரவ அதிதியாக இலங்கை தமிழாசிரியர் சங்கத்தின் முன்னாள் தலைவரும் ஓய்வுநிலை உதவிக் கல்விப்பணிப்பாளருமான சகாதேவராஜா கலந்து சிறப்பித்தார்.நிகழ்வில் அனைத்து மாணவர்களுக்கும் பாடசாலை பைகள் உள்ளிட்ட கற்றல்உபகரணங்கள் வழங்கப்பட்டதோடு, ஆசிரியர்கள் மாணவர்கள் பெற்றோர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.



# இனப்படுகொலை ஆதாரங்களை இனமாகப் பாதுகாக்கவேண்டும்

## வலி. கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் நிரோஷ் கோரிக்கை




தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட பாரதுரமான இனப்படுகொலைக்கான சாட்சியங்களை வரலாற்றாக்கும் வகையில்அமையப்பெற்றநினைவு இடங்களை நாம்பாதுகாப்பது அவசியம். அவற்றை பாதுகாப்பதற்கு சகல தரப்பினரும் ஒத்துழைக்கவேண்டும் என வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் கோரிக்கை விடுத்துள்ளார்.

செம்மணியில்அமையப்பெற்றஅணையாவிளக்கு நினைவு தூபி உடைக்கப்பட்ட நிலையில் அதனை மீளமைக்கும் முயற்சிகளில் ஒத்துழைப்பு நல்கிய நிலையில்ஊடகங்களுக்குக்கருத்துரைக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.அவர் மேலும் கூறுகையில், செம்மணி என்பது தமிழ் மக்களுக்கு எதிராகஎவ்வளவுதூரம்உள்நாட்டில்இனப்படுகொலை நடைபெற்றது என்பதை சர்வதேச அளவில் ஆதாரப்படுத்திநிற்கின்றது.

அணையா விளக்கு போராட்டம் இடம்பெற்ற இடம்மற்றும்இவ்நினைவுத்தூபிஅமைக்கப்பட்டுள்ள பகுதி என்பன யாழ் குடாநாட்டை இலங்கை அரசபடைகள் கைப்பற்றிய பின்னர் அரச படைகளால் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டுபுதைக்கப்பட்ட கிரிசாந்தி குமாரசுவாமியின் உடலம் மற்றும் பிள்ளையைதேடிச்சென்ற பெற்றோர் அயலவர் என நீதி கேட்ட பலரும் படுகொலைசெய்யப்பட்டுமீட்கப்பட்டபகுதி ஆகும். இவ்விடத்திலேயே இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டஐக்கியநாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் வேல்கர் அஞ்சலிசெலுத்தியுள்ளார்.தமிழ் மக்களின் மீது வடக்குக் கிழக்கில் அரசினால் கட்டவீழ்த்து விடப்பட்டஅரச பயங்கரவாதத்தின் சாட்சியங்கள் அபிவிருத்தி என்ற போர்வையில் பலஇடங்களில் திட்டமிட்டு மாற்றியமைக்கப்பட்டுவிட்டன.

மேலும் சில இடங்கள்தனிநபர்களாலும் அழிக்கப்பட்டுவருகின்றன.இப்போதுதமிழ்மக்களுக்கு அரசபயங்கரவாதத்தினால் எதுவுமே நடக்கவில்லை என சொல்வதற்கான உத்திகளேநடைபெறுகின்றன. இவற்றில்தமிழ் மக்கள் மிகுந்த அவதானமாக இருக்க வேண்டும்.எமக்கெதிரான அடக்குமுறைகளை ஆவணப்படுத்துவதிலும் பாதுகாப்பதிலும் நாம்அவதானமாக இருக்கவேண்டும்எனவலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் தவிசாளர்தியாகராஜா நிரோஷ் கோரிக்கை விடுத்துள்ளார்.

# சிலாபத்தில் தீப்பந்தப் போராட்டம்



( சியாஜ்)

இலங்கை வங்கி ஊழியர் சங்கத்தின் புத்தளம் மாவட்ட கிளை ஊழியர்களால்தீப்பந்த போராட்டம் மற்றும் கடவுள் பிரார்த்தனை என்பன சிலாபம் நகரின் மைத்தியில் ஒக்டோபர் 09 முன்னெடுக்கப்பட்டது.

நாட்டில் அரச வங்கிகள் எதிர்கொள்ளும் தற்போதைய மற்றும் தொடர்ச்சியானபிரச்சினைகளுக்கு ஒரு தீர்வை வழங்குமாறு அரசாங்கத்தை வலியுறுத்துவதற்காகஇந்த தீப்பந்த போராட்டம் மற்றும் கடவுள் பிரார்த்தனை ஏற்பாடுசெய்யப்பட்டதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.புத்தளம் மாவட்டத்தில் உள்ள பல அரச வங்கிகளின் ஊழியர்கள் இந்த தீப்பந்தபோராட்டத்தில் பங்கேற்றனர்.

# மட்டக்களப்பு படுவான் நிலப்பரப்பில் தொடர்ந்து யானைகளின் அச்சுறுத்தல்

(சக்திவேல்)

மட்டக்களப்பு மாவட்டம் படுவாங்கரைப் பிரதேசத்திற்குட்பட்ட போரதீவுபற்றுபிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட பாலையடிவட்டை கிராமத்திற்குள்புகுந்தகாட்டுயானைகள்அங்குள்ள 03வீடுகளையும் தென்னை, வாழை, உள்ளிட்ட பயிரினங்களையும், துவம்சம்செய்துவிட்டுச் சென்றுள்ளதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

ஆழ்ந்தஉறக்கத்திலிருந்தவேளையில்இவ்வாறு காட்டுயானைகள் திடீரெனகிராமத்திற்குள்ள புகுந்ததனால் அங்குள்ள மக்கள் மயிரிழையில்உயிர்தப்பியதாகவும்கவலைதெரிவிக்கின்றனர். யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டதன் பின்னர் இவ்வாறு மெல்ல மெல்லகிராமங்களுக்குள் உட்புகுந்த காட்டுயானைகள் தற்போது மக்கள்குடியிருப்புக்குள்ளேயே நிலைகொண்டுள்ளதனால்



அப்பகுதி மக்கள்தமது அன்றாடசெயற்பாடுகளைக்கூட சுதந்திரமாக மேற்கொள்ள முடியாதுள்ளதாகவும்அங்கலாய்க்கின்றனர்.

காலத்திற்கு காலம் மாற்றம்பெறும் அரசாங்கங்கள் காட்டுயானைப்பிரச்சனைக்குத் தீர்வு பெற்றுத் தருவதாக தெரிவித்து வந்திருந்த போதிலும்அதற்கு முற்றுப் புள்ளி வைக்காத இந்நிலையில் தந்போது நாட்டைப்பொறுப்பேற்றுள்ள புதிய அரசாங்கமாவது இதற்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும் எனவும் அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# வவுனியா மாநகர சபை உறுப்பினர் மீது தாக்குதல்

வவுனியா மாநகரசபை உறுப்பினர் ஒருவர் மீது மாநகரசபை வளாகத்திற்குள் வைத்துத் தாக்குதல்மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன்,சம்பவம் தொடர்பில் மேயர் தலைமையில் வவுனியா பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நேற்று இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, வவுனியா மாநகரசபை அமர்வு நடைபெறவிருந்த நிலையில மாநகரசபை மேயர் மற்றும் உறுப்பினர்கள் மாநகர சபையில் பிரச்சன்னமாகியிருந்தனர். இதன்போது மாநகரசபையால் புதிதாக வழங்கப்பட்ட இடத்தில் வியாபார நிலையம் ஒன்றினை நடத்தும் நபர் அங்கு வருகை தந்து மாநகரசபை உறுப்பினர்கள் சிலருடன் தனது வியாபார நிலையம் தொடர்பில் பேசியுள்ளார். இதன் போது அவ்விடத்தில் நின்ற வவுனியா மாநகரசபையின் பண்டாரிக்குளம் வட்டார



உறுப்பினர் பிறேமதாஸிடம் மாநகரசபையால் வழங்கப்பட்ட இடத்தில் கட்டப்பட்ட தனது ஏசி பூட்டியவர்த்தகநிலையத்தைஏன் முகப்புத்தகத்தில் பதிவிட்டதாக கூறி முரண்பட்டுள்ளதுடன், தகாத வார்த்தை பிரயோகங்களையும் பயன்படுத்தி குறித்த மாநகரசபை உறுப்பினர் மீது தாக்குதல் மேற்கொண்டதாக பொலிஸ் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து, ஏனைய சபைஉறுப்பினர்கள், உத்தியோகத்தர்களால் குறித்த நபர் அங்கிருந்து வெளியேற்றப்பட்டிருந்தார். சம்பவம் தொடர்பில் மாநகர மேயர் காண்டீபன் தலைமையில் வவுனியா பொலிஸ் நிலையத்திற்கு சென்ற சபை உறுப்பினர்கள் சென்ற நிலையில் மாநகர சபை உறுப்பினர்.பிறேமதாஸ் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. வவுனியா பொலிசார் சம்பவம்தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். இதேவேளை, தாக்குதல் நடத்தியதாக கூறப்படும் நபரும் தன் மீது மாநகரசபை உறுப்பினர் தாக்குதல் நடத்தியதாக வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுபதிவு செய்துள்ளதுடன், வவுனியாவைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# ஐஸ் போதைப்பொருளுடன் கைதான 37 வயது சந்தேகநபரிடம் விசாரணை

(பாறுக் ஷிஹான்)

அம்பாறை மாவட்டம் - கல்முனை தலைமையக பொலிஸ் பிரிவிற்குட்பட்ட புறநகர் பகுதியில் ஐஸ் போதைப்பொருளுடன் 37 வயதுடைய சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கல்முனை விசேட அதிரடிப்படை புலனாய்வு பிரிவினருக்குபொதுமக்களிடம் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய ஒக்டோபர்08 தரவைப்பிள்ளையார் கோவில் அருகில்உள்ள கடற்கரை பள்ளி வீதியில் வைத்து கல்முனை விசேட அதிரடிப் படையினர் கைது செய்துள்ளனர்.

ஐஸ் 1 மில்லி 50 மில்லி கிராம் குறித்த 37 வயது சந்தேக நபரிடம் இருந்து மீட்கப்பட்டதுடன் கைதானவர் நீண்ட காலமாக போதைப்பொருளை பழ விற்பனையாளர் போன்று விற்பனைசெய்பவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.




# தேசிய விளையாட்டு வாரத்தை முன்னிட்டு உத்தியோகத்தர்களுக்கு நடைப் பயிற்சி

(ஹாரீஸ்)




தேசியவிளையாட்டு வாரத்தினை முன்னிட்டு தொற்றா நோய் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக நாவிதன்வெள பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கான நடைபயிற்சியும் அதனுடன் இணைந்ததாக உடற்பயிற்சி நிகழ்வும் ஒக்டோபர் 07 பிரதேச செயலாளர் ராகுலநாயகி சஜிந்ரன் தலைமையில் இடம்பெற்றது.

பிரதேசசெயலகஉத்தியோகத்தர்களுக்கு விளையாட்டு உத்தியோகத்தர் வசந்தின் நெறிப்படுத்தலில் உடற்பயிற்சி திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டதுடன் ஆரோக்கியமான உணவு பழக்கங்கள் குறித்தும் விழிப்புணர்வும் ஏற்படுத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் கிருபைராஜா, பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.



# ஊழல் எதிர்ப்பு சட்டம் தொடர்பில் திருகோணமலையில் விளக்கம்

(ஹஸ்பர்)

திருகோணமலை மாவட்ட உள்ளூராட்சிமன்ற தவிசாளர்கள், உறுப்பினர்கள் மற்றும் தொடர்புடைய அதிகாரிகளுக்கான ஊழல் எதிர்ப்பு சட்டம் மற்றும் நேர்மை குறித்த தேசிய நிகழ்ச்சித் தொடர் ஒக்டோபர் 08 திருகோணமலையில் உள்ள கிழக்கு மாகாண செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்த லால், இலஞ்சம் மற்றும் ஊழல் குற்றச்சாட்டுகளைவிசாரிக்கும் ஆணைக்குழுவின்பணிப்பாளர் நாயகம் ரங்க திசாநாயக்க ஆகியோரின் தலைமையில் இந்த நிகழ்ச்சித் திட்டம்இடம் பெற்றது.

இதில்கிழக்குமாகாணபிரதம செயலாளர் நாமல் தலங்கம, இலஞ்சம் மற்றும் ஊழல் குற்றச்சாட்டுகளைவிசாரிக்கும் ஆணைக்குழுவின் உதவிப் பணிப்பாளர் நாயகம் தனுஜா பாலசூரிய, பிரதிப் பிரதம செயலாளர் மணிவண்ணன் மற்றும் மாகாண உள்ளூராட்சி ஆணையாளர், செயலாளர்கள் மற்றும் பிரதிநிதிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

# மீராவோடையில் இருட்டுப் பாலம் அச்சத்துடன் பயணிக்கும் மக்கள்

(பர்ஸான்)

கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேசசபைக்குட்பட்ட மீராவோடை -4 மீனவர் சங்க வீதியில் அமைந்துள்ள சிறிய பாலம் இருள் நிறைந்து காணப்படுகிறது. மின் விளக்குகள் பொருத்தப்படாமல் மிக நீண்ட காலமாக அந்த இடம் இருளில் மூழ்கிக் கிடக்கிறது. இதனால் அந்த பாலத்தை குறுக்கறுத்துச் செல்லும் சிறுவர்கள், வயோதிபர்கள், பெண்கள் என அனைவரும் அச்சத்துடன் கடந்து செல்கின்றனர். குறித்த பாலம் இருளில் இருப்பதால் அங்கு சமூக சீர்கேடு இடம் பெறவாய்ப்பும் உள்ளதாக பிரதேச வாசிகள் கவலை தெரிவிக்கின்றனர். பள்ளிவாசலுக்கு செல்வோரும் ஏனை தேவைகளுக்காக அவ்விடத்தால் செல்வோரும் நாளாந்தம் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர். எனவே, பொதுமக்களின் நலன் கருதி ஓட்டமாவடி பிரதேச சபை நிர்வாகம் துரிதநடவடிக்கையினை மேற்கொண்டு குறித்த இடத்தில் மின் விளக்குகளைப் பொருத்த வேண்டும் என பிரதேச வாசிகள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.


வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்
மருதம் பசுமை நகர்
Marutham Green City
நல்லூர் ஆலயம் 9km
கச்சேரி 8km
யாழ் பேருந்து நிலையம் 11km
யாழ் புகையிரதநிலையம் 10km
வடக்கு மாகாணசபை 9km
உள்ளக வசதிகள்
நூலகம்
நீச்சல் தடாகம்
உணவகம்
சிறுவர் பூங்கா
விளையாட்டுத்திடல்
மீன்பிடி குளம்
A – 2 பரப்பு மேட்டுக்காணியுடன் 2 பரப்பு வயல்க்காணி
B – 2 பரப்பு மேட்டுக்காணியும் 2 பரப்பு வயல்க்காணியும் (தனிதனியாக)
C – 2 பரப்பு மேட்டுக்காணி பிரதான வீதியுடன்
0777 43 55 57


JDr
JDR CARE HOME & MEDICALS
மூத்த பிரஜைகளுக்கான பூரண வசதிகளுடனான பராமரிப்பு
FACILITIES
Medical Care
24×7 Nursing Care
Adjustable Hospital Beds
AC / Non AC rooms
Attached Bathroom
Laundry
Physiotherapy
Speech therapy
NG care
BOOK NOW
0701348384
46,Brodie Lane, Jaffna


புதிய கல்வியாண்டு
2025
zoom
76667-4945
LEARN EASY
KNOWLEDGE IS POWER
January 25 FREE
February 5
தரம் 6 தொடக்கம்
தரம் 11 வரை
தமிழ் English
கணிதம் விஞ்ஞானம்
வரலாறு சிங்களம்
கணக்கீடு
English Literature
ICT


Study MBBS in China
SLMC APPROVED
Dalian Medical University
YOUR PATH TO WORLD CLASS MBBS
JDR HEALTH CARE PVT(LTD)
SEPTEMBER 2025
ADMISSION OPEN
CONTACT US FOR ADMISSION
0701348384

# கல்முனை ஆதார வைத்தியசாலைக்கு மருத்துவ உபகரணங்கள் அன்பளிப்பு

## ரூ. 3 கோடி ரூபாய் பெறுமதியானவை

(சகா தேவராஜா)

இலங்கை சுகாதார திணைக்கள நிதி ஒதுக்கீட்டில் 30 மில்லியன் பெறுமதியான 2ஆம் கட்ட மருத்துவ உபகரணங்கள் கல்முனை ஆதாரவைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. கல்முனை ஆதார வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி சுகுணன் குணசிங்கம் மேற்கொண்ட பெரும் முயற்சி காரணமாக அவ் உபகரணங்கள் வைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்டன.



பணிப்பாளர் சுகுணன் வைத்தியசாலையின் விடுதி , பிரிவுகளின் பொறுப்பாளர்களுடன் கலந்துரையாடி தேவைகளை இனம்காணப்பட்டதற்கு அமைவாக உபகரணங்களை விரைவாக பெற்றுத்தர நடவடிக்கைஎடுப்பதாக கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. அந்த வகையில் மிக முக்கியதேவையான சில உபகரணங்கள் ஏற்கனவே பெற்றுகையளிக்கப்பட்டிருந்தநிலையில் ஒக்டோபர் 09 இவை கொண்டு வரப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

'சிறந்த உபகரணங்கள் சிறந்த சேவைக்கு வழிகாட்டி' என்ற கருத்திற்கு அமைவாக இச்சேவை தொடர்கிறது. இத்திட்டத்தினால் வைத்தியசாலையை நாடி வரும் மக்கள் பயன் பெறுவார்கள் என்பதில் ஐயமில்லை.

# மொட்டு கட்சி அமைப்பாளரால் கொலை மிரட்டல் என முறையீடு

திரிவைத்தகுளம் காணி ஆக்கிரமிப்பு தொடர்பில் வெளிப்படுத்தியமைக்காக மொட்டுக் கட்சியின் அமைப்பாளரால் கொலை மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளதாக தமிழ் தேசிய மக்கள் முன்னனியின் வவுனியா மாவட்ட அமைப்பாளர் தவபாலன்வவுனியாசிரேஸ்டபொலிஸ்அத்தியட்சகர் அலுவலகத்தில் முறைப்பாடுசெய்துள்ளார்.

வவுனியா,கண்டிவீதியில்அமைந்துள்ளசிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர்அலுவலகத்தில் முறைப்பாடு செய்த பின் ஊடகங்களுக்கு இவ்வாறுதெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,வெடிவைத்தகல் கிராம அலுவலர் பிரிவில் திரிவைத்தகுளம் என்னும் கிராமம்போகஸ்வேவ குடியேற்றவாசிகளால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கின்றது. அந்தவிடயங்களை நாங்கள் கடந்த யூலை மாதம் கள விஜயம் செய்து ஊடகங்கள் வாயிலாகவெளிக் கொண்டு வந்திருந்தோம். காணி உரிமையாளர்கள் ஒலுமடுவில்இருக்கிறார்கள்.

அவர்கள் காணியை வெளியாக்கிய போது அவர்கள் மீது வனஇலாகா திணைக்களம் வழக்கு தாக்கல் செய்து மூன்று வருடங்கள் வழக்கு இடம்பெற்றுதள்ளுபடி செய்யப்பட்டிருந்தது. இந்த நிலையில்தான்போகஸ்வேவகுடியேற்றவாசிகளால் குறிப்பாக மகிந்தவின்மொட்டுக் கட்சியின் அமைப்பாளராக இருக்கின்ற பிமல் தர்மராஜா குழுவினரால்டோசர் மூலம் காடுகள் அழிக்கப்பட்டு அந்த இடத்தில் விவசாயம்செய்யப்பட்டுள்ளது. இந்த விடயங்களை ஊடகங்கள் மூலம் நாம் வெளியில் கொண்டுவந்திருந்தோம்.

செப்டம்பர் 30 அந்த இடங்களைப் பார்வையிட வன்னியின் பாராளுமன்றஉறுப்பினர் சத்தியலிங்கம் மற்றும் வவுனியா வடக்கு பிரதேச சபை தவிசாளர்உள்ளிட்ட குழுவினர்




சென்றிருந்தனர். அந்த இடத்திற்கு வருகை தந்த போது காணியைஆக்கிரமித்துள்ள பிமல் தர்மராஜா போன்ற குழுவினர் அங்கு வருகை தந்தவர்களைபார்த்து அச்சுறுத்தும் வகையில் நடந்து கொண்டதுடன், என்னுடையபெயரினையும், பிரதேச சபை உறுப்பினர் தமிழ் செல்வன் பெயரையும்,வன்னிப் பாராளுடன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் பெயரையும்குறிப்பிட்டு அவர்கள் இங்கு இருக்கிறர்களா? அவர்களை வெட்டுவதற்காக, அவர்களை கொலை செய்ய தான் வந்தோம் என்று பாராளுமன்ற உறுப்பினர்சத்தியலிங்கத்திற்கு முன்னால் தெரிவித்திருந்தார்கள்.

அந்தப்பகுதி போகஸ்வேவ பொலிஸ் நிலையத்திற்கு உட்பட்டதாக இருந்தாலும் அந்தஅச்சுறுத்தலுக்கு எதிராக வவுனியா சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர்அலுவலகத்திற்கு வருகை தந்து முறைப்பாட்டை வழங்கியுள்ளோம். அவர்கள்நேரடியாக போகஸ்வேவ பொலிஸ் நிலையம் ஊடாக இதனை அணுகுவவதற்காக இநத விசாரணையைமேற்கொள்ளுமாறு அந்த அதிகாரிக்கு சிரேஸ்டபொலிஸ்அத்தியட்சகஜ்அறிவுறுத்தியுள்ளார். நாங்கள்வாக்குமூலம்வழங்கியுள்ளோம்.இனிவரும் காலங்களில் இவ்வாறானஅச்சுறுத்தல் வந்தாலும் திரிவைத்த குளம் தமிழர் காணிகளை மீட்க தொடர்ந்துபோராடுவோம் எனவும் தெரிவித்தார்.

# சட்டவிதிகளை மீறியவர்களின் 10 மோ. சைக்கிள்கள் பறிமுதல்

## கல்முனையில் சம்பவம்

(பாறுக் ஷிஹான்)



பொது போக்குவரத்து சட்டங்களை மீறிய குற்றச்சாட்டின் அடிப்படையில் பலரதுமோட்டார் சைக்கிள்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக கல்முனை தலைமையக பொலிஸ்மோட்டார்போக்குவரத்து பிரிவு பொறுப்பதிகாரியும் பிரதான பொலிஸ்பரிசோதகருமான நஸீர் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டம் கல்முனை தலைமையக பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நகரப்பகுதிஉட்படபுறநகர்பகுதிகளில்ஒக்டோபர்10விசேடசுற்றிவளைப்புநடவடிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டது.இதன் போது மோட்டார் சைக்கிள் ஆவணம் காப்புறுதி எதுவும் இன்றி மோட்டார்சைக்கிளை செலுத்துவது, சாரதி அனுமதிப்பத்திரமின்றி வாகனம் செலுத்துவதுதலைக்கவசம் அணியாது செல்வது , ஒரு மோட்டார் சைக்கிளில் இருவருக்குமேற்பட்டவர்கள் பயணிப்பது , அதிவேகமாக செல்வது , மிக ஒலி எழுப்பியமோட்டார் சைக்கிள்கள் தொடர்பில் தலைக்கவசம் இன்றியும் சாரதிஅனுமதிப்பத்திரம் உள்ளிட்ட முக்கிய ஆவணங்கள் இன்றி பயணித்தமை உள்ளிட்ட பொது போக்குவரத்து சட்ட திட்டங்களை மீறிய குற்றச்சாட்டின் அடிப்படையில்20க்கும் மேற்பட்ட மோட்டார் சைக்கிள்கள் உட்பட அதனை ஓட்டிய சந்தேகநபர்கள் சட்டநடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டனர்.

இச்சோதனை நடவடிக்கையானது அம்பாரை மாவட்ட கல்முனை பிராந்திய உதவி பொலிஸ்அத்தியட்சகர் இப்னு அஸார் வழிகாட்டலில் கல்முனை தலைமையக பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரி லசந்த களுவாராய்ச்சி தலைமையில் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# சிறுவனைக் காணோம்

வவுனியாவில் இயங்கராவூர், கற்குளம், சாளம்பைக்குளத்தை சேர்ந்த ஜெயசீலன்அபிஷேக் என்ற 16 வயது சிறுவனை காணவில்லை என பூவரசங்குளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. ஒக்ரோபர் 09 வீட்டில் உறங்கியமகனைகாணாதநிலையில் பெற்றோர் மற்றும் உறவினர்களால் அப்பகுதி முழுவதும்தேடியும் கிடைக்காதநிலையிலேயேசிறுவனின் பெற்றோரால் முறைப்பாட்டு பதிவுசெய்யப்பட்டுள்ளது.



குறித்த சிறுவன் தொடர்பில் தகவல் ஏதும் அறிந்தால் சிறுவனின் தாயின்தொலைபேசி இலக்கம் 0761698019க்கு அல்லதுசிறுவனின் மாமாவின் தொலைபேசிஇலக்கம் 0774909955 அழைத்துஉதவுமாறு கேட்டுக்கொண்டுள்ளனர்.

# காரைதீவு கண்ணகி முதியோர் சங்கம் அம்பாறையிலே சிறந்ததாகத் தெரிவு

(சகா தேவராஜா)

கிழக்கு மாகாண சமூக சேவை திணைக்களம் நடாத்திய கிழக்கு மாகாண சர்வதேசமுதியோர் தின விழாவில் அம்பாறை மாவட்டத்தில் சிறந்த முதியோர்சங்கமாக காரைதீவு கண்ணகி முதியோர் சங்கம் தெரிவு செய்யப்பட்டு விருதுவழங்கி கௌரவிக்கப்பட்டது.

கிழக்கு மாகாண சமூக சேவை திணைக்கள பணிப்பாளர் கிருஷ்ணபிள்ளை இளங்குமுதன்தலைமையில் முதியோர் தின கௌரவிப்பு விழா ஒக்டோபர் 09மட்டக்களப்பு மாநகர சபை மண்டபத்தில் நடைபெற்றது.அங்கு மட்டக்களப்பு அம்பாறை திருகோணமலை மாவட்ட சிறந்த முதியோர் சங்கங்கள்முதியோர் தலைவர்கள் தெரிவு செய்யப்பட்டு பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

கிழக்குமாகாணஆளுனர்பேராசிரியர்ஜயந்தலால் ரத்ன சேகர, காரைதீவு கண்ணகிமுதியோர் சங்கத் தலைவர் சிவானந்தராஜா பொருளாளர் வசந்தாதமலர்ஆகியோரிடம் அதற்கான விருதை




வழங்கி கௌரவித்தார். நிகழ்வில் கிழக்கு மாகாண சுகாதார சமூக சேவை அமைச்சின் செயலாளர் திசாநாயக்க, மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் அருள்ராஜா மாநகரமேயர் சிவம் பாக்கியநாதன் மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைபணிப்பாளர் மருத்துவர் முரளீஸ்வரன் உள்ளிட்டோர் அதிதிகளாக கலந்துசிறப்பித்தனர்.

# கட்டத்தல் சிகரெட் மற்றும் பீடி இலைகள் மாறவிலவில் பொலிஸாரிடம் மாட்டின

(சியாஜ்)

இந்தியாவிலிருந்து கடல் வழியாக சட்டவிரோத நாட்டிற்குள் கொண்டு வரப்பட்ட 1324 கிலோகிராம் பீடி இலைகளையும், வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட 90,000 சிகரெட்டுகளையும் மாரவில பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர்.

மாரவில, முடுகடுவ பகுதியில் நேற்று அதிகாலை 3.00 மணியளவில்இந்த சுற்றிவளைப்புநடவடிக்கை இடம்பெற்றுள்ளது.பீடி இலைகள் 34 பொலிதீன் பைகளில் அடைக்கப்பட்டிருந்ததுடன், 450 சிகரெட்பண்டல்கள் அடங்கிய 09 பெட்டிகளில் சோதனைநடவடிக்கையின்போதுஅதிகாரிகளினால் கைப்பற்றப்பட்டுள்ளது.

பீடி இலைகள் மற்றும் சிகரெட்டுகள் 04 சிறிய படகுகளில் நாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளதுடன், சுற்றிவளைப்பின் போது



சந்தேக நபர்கள் தப்பிஓடிவிட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். பறிமுதல்செய்யப்பட்டபீடிஇலைகள் மற்றும் சிகரெட்டுகள் வென்னப்புவ வைகாலில் உள்ள கலால் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் ஒப்படைக்கப்படஉள்ளதாகபொலிஸார்தெரிவித்தனர்.

காலைக்கதிர் Kalaikkathir









இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 11.10.2025இல் வெளியிடப்பெற்றது